# சுமைகள்




சுமைகள் இதழ் 6, தை, மாசி 1993

# இரு கரைகள்..



பானுபாரதி
08.01.90.

என் பிரயமானவனே!
நீ;
உனது இருப்பை
தாங்கியிருக்கும் கரை,
நான்;
எனது காத்திருப்பை
சுமந்திருக்கும் கரை
இவைகளெல்லாம் வெறுமையா?

இல்லை;
இல்லவேயில்லை.
உன்னைச் சுமந்து நானும்,
என்னைச் சுமந்து நீயும்,
நமது கனவுகளைச் சுமந்து
இருகரைகளும்.

இருளில் வழியனுப்பி வைத்தேன்
நீ போய்விட்டாய்.
போய்த்தான் விட்டாய்.
போக விரும்பாதவனாய் போனாய்.

ஆனால்
கொலை சுமந்த இருள்
இன்னமும் இருளாகவே இருக்கிறது.
இருள் மூடிய படலைக்குள்

பாசக் கயிற்றோடு
பஞ்சாப் தலைப்பாகைகள் யம தூதர்களாய்.
கூடவே/ எமது தூதர்களும்
யூதர்களைப்போல்.

ஒருபகல்
உன்னைச் சுமந்து வரும்
அந்தப் பகலில் உனக்கும் பங்குண்டு

இருள்
என்னைத் துரத்துகிறது.
ஈவிரக்கமற்ற இருள்.
மரணங்கள் நிறைந்த இருள்
கனவுகளோடும், கவிதைகளோடும்
கரை நீளமாய்
ஓடிக் கொண்டே இருக்கிறேன்.

ஒரு பகல்
உன்னைச் சுமந்து வரும்
உனது கரையிலிருந்து
எனக்காக நீ வருவாய்

இருள் என்னை விழுங்காதவரை,
மரணம்
என்னை குதறாதவரை,
குரல்வளையை சிதைக்காதவரை
எனது கரையில்
உனக்காக காத்திருப்பேன்.

இல்லையேல்...,
இல்லையேல்
கரையின் மணற்பரப்பெங்கும்
எனது காலடிகளும், கவிதைகளும்
உன்னை வரவேற்கக் காத்திருக்கும்.

# வெளிப்பாடு....

" இவையள் வந்து அவங்களுக்கு எதிரான ஆக்கள் ...."

" வேற இயக்கத்தில இருந்து பிரிஞ்சு வந்த ஆக்கள் ... "

" கொழும்பில இருக்கிற இயக்கங்கள் இவயளுக்குப் புத்தகம் நடத்தக் காசனுப்புது போல கிடக்கு "

" இங்க இருந்து சுதந்திரம் எண்டு எழுதிற இவையள் நாட்டில போய் எழுதலாந்தானே. . ஏன் இவயள் நாட்டுக்குப் போகேலாம கிடக்கு . . ?

" இவையள் சனத்துக்கு துரோகம் செய்து போட்டு வந்த ஆக்கள் போல கிடக்கு. அதுதான் துரத்தப்பட்டவயள். இங்க இருந்து பேச்சு சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், மனித உரிமை எண்டு சும்மா பம்மாத்துக் கதைக்கினம் "

இப்படி அயலட்டங்களின் சொல்லாபிசேகங்களை வாங்கிக் கட்டிக் கொண்டு 2வது வருடத்தினுள் சுமைகள் காலடி எடுத்து வைக்கப் போகிறது. ஆமாம் இந்த வருடம் வரும் தொழிலாளர் தினமான வைகாசி 1ம் திகதியுடன் சுமைகள் தனது ஒரு வயதை எட்டுகிறது. வெளிநாடுகளில் வெளிக் கொணரப்படும் பத்திரிகைகள் , சஞ்சிகைகளுக்கு சாதாரணமாக ஏற்படக் கூடிய இன்னல், இடையூறுகள் எம்மையும் விட்டு வைக்கவில்லை. சொல்லப் போனால் பொருளாதார நெருக்கடி சுமைகளுக்குப் பெரும் சுமையாகி திணறடித்து விட்டது. சுமைகள் இதழ் 5 அச்சாகி சுமார் இரண்டு மாதகாலம் தபாற் செலவை ஈடு செய்ய முடியாத காரணத்தால் வாசகர்களுக்கு உரிய காலத்தில் சென்று சேரவில்லை என்ற வருத்தம் எமக்கு என்பதோடு, இதற்காக வாசகர்களிடம் மன்னிப்பையும் வேண்டுகிறோம்.

சுமைகள் நியாய அநியாயங்களை தெளிவுற எழுதாமலும், இருளிலிருந்து வருவதைப் போன்ற தன்மையுடையதாகவும் உள்ளதென பல வாசகர்கள், எழுத்தாளர்கள், குற்றம் சுமத்தியுள்ளனர். இதன் காரணமாக பல எழுத்தாளர்கள் சுமைகளுக்கு தங்கள் ஆக்கங்களை அனுப்புவதில் தயக்கம் காட்டுகின்றனர் என்பதை நாம் உணர்கிறோம். கடந்த கால சுமைகள் இதழில் எதிர்ப்பியக்கத்தன்மை அரிதாகக் காணப்பட்டாலும் கூட மனித உரிமைகளுக்காக எந்த

வேளையிலும் குரல் கொடுக்கத் தயங்காது என்ற இறுக்கமான கருத்தைக் கொண்டுள்ளது. மனித நேயம் எந்த சக்திகளால் சீரழிக்கப்பட்டாலும் அதற்கெதிராய் குரலெழுப்புவதில் தயவு தாட்சணியம் காட்டாது என்பதிலும் உறுதியாயுள்ளது.

அண்மைக்காலங்களாக முஸ்லீம் மக்களுக்கு எதிராக புலிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராகவும், 23 . 10. 92 இல் பொலநறுவை மாவட்டத்தில் நான்கு கிராமங்களில் புலிகளால் அப்பாவி முஸ்லீம் மக்கள் படுகொலை செய்யப்பட்டதையும் கண்டித்து சுமைகள் குரல் கொடுக்க வில்லை என்ற குற்றச் சாட்டு வாசகர்களிடமிருந்து எம்மீது சுமத்தப்பட்டடுள்ளன.

எடுத்த எடுப்பிலேயே இயக்க எதிர்ப்பு வாதத்தை அதிகமாய் வெளிப்படுத்தியதால் பல சஞ்சிகைகள் பத்திரிகைகள் பரவற் படுத்தப்படாமல், மக்களைச் சென்றடையாமலும் அந்நியப்பட்டு குறுகிய வட்டத்திற்குள்ளேயே சுருங்கிப் போன அநுபவங்களை நாம் அனைவரும் அறிவோம். இதன் அடிப்படையிலேயே சுமைகள் தனது ஆரம்பகாலங்களை இலகுவாய் வெளிக் கொணர்நதது. எத்தனை சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளிவருகின்றன என்பதைவிட எவ்வளவு தூரம் மக்களிடம் இவை பரவற் படுத்தப்பட்டன என்பதே இன்று புலம் பெயர்ந்த நாடுகளில் வெளியாகும் சஞ்சிகைகளை நோக்கி எழுப்பப் பட்டிருக்கும் கேள்வியாகும். " பரவற்படுத்தல் " என்ற கடமையை முடிந்தவரை செய்வதற்கே சுமைகள் முயற்சி எடுக்கிறது. இதன் அடிப்படையில்தான் கடந்தகாலங்களில் சில கடினமான ஆக்கங்களை தவிர்த்திருக்கிறோம். அண்மைக்காலமாக எமக்குக் கிடைத்த, கிடைக்கும் விமர்சனக் கடிதங்கள், கேள்வியிலிருந்து மக்கள் உண்மையைத் தேடுகிறார்கள், உண்மைகளை அறிய விரும்புகிறார்கள், தமது பிரச்சனைகளை வெளிப்படையாக்க முனைகிறார்களென்பதை நாம் ஆணித்தரமாய் அறிய முடிகிறது. மக்கள் தேடும் உண்மையை சுமைகளும் தேடுகிறது. கிடைப்பதை வாசகர்களோடு பகிர்நது கொள்ள முயற்சிக்கிறது.

முஸ்லீம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இன்று நேற்று தொடங்கப்பட்ட ஒன்றல்ல. சிங்களவராலும் தமிழராலும் முஸ்லீம் மக்களுக்கு துரோகம் இழைத்து வரும் வரலாறு மிக நீண்டகாலமானதாகும்

1976ம் ஆண்டு சிறிலங்கா சுதந்திர கட்சி அரசின் ஆசீர்வாதத்தோடு புத்தளம் பள்ளிவாசலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களும் தாக்கி எரிக்கப்பட்டன. பல முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். 1982 இல் ஐக்கிய தேசிய கட்சி அரசால் காலி நகர முஸ்லீம்கள் மீது அரச பயங்கரவாதம்

கட்டவிழ்த்து விடப்பட்டது. ( இந்தக் கால கட்டங்களுக்கு முன்றாலேயே முஸ்லீம் மக்களுக்கு மீதரன ஒடுக்கு முறைகள் தொடங்கி விட்டன என்பது குறிப்பிடத்தக்கது 1915 இல்)

பின்பு ஈழவிடுதலையின் பெயரால் உருவாகிய அனைத்து இயக்கங்களுமே முஸ்லீம் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளையும் வன்முறை நடவடிக்கைகளையும் மேற் கொண்டு இருக்கின்றன.

1987 மார்கழி 30ல் காத்தான்குடியிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் 28 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.

1988 பங்குனி மாதம் கல்முனையில் 25 முஸ்லீம் மக்கள் கொல்லப்பட்டனர்.

1988 கார்த்திகை மாதம் 17ம் திகதி ஈ.பி.ஆர்.எல்.எவ் , ஈ. என்.டி.எல்.எவ் , ரெலோ ஆகிய இயக்கங்களின் கூட்டு இராணுவமான தமிழ் தேசிய இராணுவத்தால் 40 முஸ்லீம் பொலிசார் ஏனைய தமிழ் சிங்கள பொலிசார்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

1989 இல் சம்மாந்துறைப் பகுதியில் மேற் கூறப்பட்ட இயக்கங்களினால் இந்தியப் படையின் ஆதரவோடு கொலை, கொள்ளைகள் நடாத்தப்பட்டன. இந்தக் கொலை, கொள்ளைகள் குறிப்பாக முஸ்லீம் கிராமங்களிலேயே நடாத்தப்பட்டன.

1990 ஆவணி மாதம் 3ம் திகதி காத்தான்குடியில் 146 முஸ்லீம்களும், ஏறாவூரில் 173 முஸ்லீம்களும் பள்ளிவாசலில் வைத்துப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

1990 ஐப்பசியில் யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பகுதிகளிலிருந்து முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை விட்டு புலிகளினால் விரட்டியடிக்கப்பட்டனர்.

1992 சித்திரை மாதம் 26 இல் அழிஞ்சிப்பொத்தானையில் 54 முஸ்லீம்கள் கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். இப்போ 1992 ஐப்பசி 23இல் நான்கு முஸ்லீம் கிராமங்களை புலிகள் தமது மனித வேட்டைக் களமாக்கி உள்ளது.

எதிர்கால வரலாற்றில் அனைத்து இயக்கங்களுமே இவற்றிற்கு மக்கள் முன் பதிலிறுத்தேயாக வேண்டு. அதிலும் அண்மைக்காலமாக நடை பெற்றுவரும் முஸ்லீம் மக்கள் மீதான புலிகளின் ஒடுக்குமுறை தமிழர்களிடமிருந்து முஸ்லீம் மக்களை நிரந்தரமாகவே அந்நியப் படவைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. தமிழர்கள், முஸ்லீம்களிடையே பல நூற்றாண்டுகாலாக இருந்து வந்த ஒற்றுமை சீரழிந்து போகும் நிலையில் உள்ளது. இது நிகழக் கூடாது . நிகழவே கூடாது. முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் அவர்களை மீண்டும் சேரவும், முஸ்லீம் மக்களின்

சுய நிர்ணய உரிமை பாதுகாக்கப்படவும், குரல் எழுப்புவதில் நாம் தயக்கம் காட்டமுடியாது. இது அனைத்து தமிழர்கள் முன்னும் இன்றுள்ள வரலாற்றுக் கடமையாகும். நாம் மௌமாயிருக்கும் பட்சத்தில் முஸ்லீம் மக்களுக்கு தமிழர்கள் வரலாற்றுத் துரோகம் இழைத்தவர்களாகவே இருப்பார்கள். ஈழவிடுதலையின் பெயரால் போராடப் புறப்பட்ட, அல்லது உருவாகிய அனைத்து இயக்கங்களிலுமே முஸ்லீம் மக்கள் இணைந்து போராடி உள்ளனர் ஊன்பதை யாரும் மறுப்பதற்கு இல்லை. புனிதப் போர் என்ற பெயரால் உயர்த்தப் பட்ட அதே ஆயுதங்கள் இன்று ஓர் மூன்றாவது சிறுபான்மையினரை நோக்கி திரும்பியுள்ளது.

" அனைத்து முஸ்லீம் மக்களுக்கும் நாம் எதிரானவர் அல்ல" என்று புலிகள் கூறிக் கொண்டாலும் கூட முஸ்லீம்களை தமிழர்களின் விரோதிகளாய்ப் பொய் பிரச்சாரங்களை இன்றொரு பக்கத்தால் செய்து வருவதுடன், அப்பாவி முஸ்லீம்களை அழிப்பதிலும் அக்கறையாயுள்ளனர் என்பது வெட்ட வெளிச்சமான உண்மை. சிறிலங்கா அரசினால் உருவாக்கப்பட்டு அதன் கூலிக் கூட்டங்களில் ஒன்றான ஊர்காவல் படையினரின் அடாவடித்தனங்களுக்காக எல்லா முஸ்லீம்களையுமே பலி கேட்பது மிக மோசமான வெறித்தனத்தின் வெளிப்பாடாகும். இங்கே தமிழ் மக்களை, முஸ்லீம் மக்களும், முஸ்லீம் மக்களை தமிழ் மக்களும் சரியாகப் புரிந்து கொண்டு, தம் இரு சமூகங்களுக்குமே இன்னல், இடையூறு விளைவிக்கும் சக்திகளை சரிவர இனங்கண்டு அவற்றிற்கு எதிராகப் போர்க்குரல் எழுப்ப வேண்டிய கட்டாயம் இன்று உள்ளது. சிங்கள பேரினவாத்திடமிருந்து தமக்கு விடுதலை வேண்டுமென்ற விருப்பும், உணர்வும் உள்ள ஒவ்வொரு தமிழனும் முஸ்லீம் மக்களின் உரிமைகளை மறுப்பதும், அவர்களது பாரம்பரிய பிரதேசங்களை விட்டுத் துரத்தியடிப்பதும் தவறானதென்று நிச்சயம் உணர்ந்து கொள்வான்.

நேரடியாகவும், தொலைபேசி மூலமாகவும், தபால் மூலமாகவும் சுமைகளின் வளர்ச்சி கருதி விமர்சனங்களை தயங்காமல் முன் வைத்த வாசக நண்பர்களுக்கும், எழுத்தாள நண்பர்களுக்கும், ஆக்கங்களை அனுப்பி வைத்த இலக்கிய எழுத்தாள நண்பர்களுக்கும் சுமைகள் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் தொடர்ந்து ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் தரமுடைய ஆக்கங்களையும் சுமைகள் எதிர்பார்க்கிறது. இந்நேரத்தில் சுமைகளின் பொருளாதார

நெருக்கடி வேளைகளில் பொருளாதார உதவி செய்த வாசக நண்பர்களையும் நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

வாசகர்களுக்கு:

சுமைகளின் இரண்டாவது வருடத்திற்கான உங்கள் சந்தாக்களை எமக்கு அனுப்பி வைத்து பேருதவி புரியுமாறு நேசத்தோடு வேண்டுவதுடன், முதலாவது வருடத்திற்கான சந்தாவை செலுத்தாமல் இன்னும் பல வாசகர்கள் உள்ளனர் என்பதையும் கவலையுடன் தெரிவித்து, அவர்களையும் காலக்கிரமத்தில் சந்தாவை செலுத்தி உதவி புரியுமாறு அன்போடு வேண்டுகிறோம்.

சுமைகளின் ஒரு வருட நிறைவை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றை வெளியிட எண்ணியுள்ளோம். இலக்கிய எழுத்தாள நண்பர்கள் ஆக்கங்களை அனுப்பி உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## சுமைகள் வெளியீட்டுக் குழு.


சுமைகள்

தொடர்புகளுக்கு:
சுமைகள்
ALMENNINGS GT- 1
4013 STAVAVGER
NORWAY
தொலைபேசி: 04-891578

வங்கிக்கணக்கிலக்கம்:-
"SUMAIKAL"
3201. 27.03030
SRBANK STAVANGER

ஐயா....

# தீராத வியாதி ஐயா...




நேரம். அதற்கு வரையறை இல்லை. நள்ளரவு, அதிகாலை, மாலை என்று எல்லா நேரங்களிலும் வருகிறது இந்த தொலை பேசி அழைப்பு. இனம் தெரியாத , ஏதோ ஒர் ஏக்கமான முனகல் குரல், அல்லது விரசமும், ஏக்கமும் பொருந்திய சினிமாப் பாடல் ஏதாவதொன்று. மறுமுனையிலிருந்து ஒலிக்கிறது. ( பாடல்கள் நல்ல ஸ்டீரியோ செட்டில்த் தான் போடுகிறார்கள். அதுவும் சி. டி யில் போடுகிறார்கள் போல் தெரிகிறது. ஏனென்றால் பாடல் மிகத் தெளிவாகவும் நன்றாகவும் கேட்கிறது.)

இவர்கள் தொலைபேசியில் அழைகும் நேரங்களையும், அதற்காகச் செலவிடும் நேர இடைவெளி அளவுகளையும் வைத்துப் பார்கும் போது நோர்வேயின் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கியுள்ள பல இலட்சம் பேரில் இவர்களும் அடங்குவர் என்ற முடிவக்கு வரமுடிகிறது.

எமது தேசத்தைப் போல் வேலை இல்லையென்றால் மனிதன் அன்றாட அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப் படமாட்டாமல் மனித வாழ்வு அல்லறும் நிலை இந்நாட்டில்

இல்லை. வேலை வாய்பற்றிருக்கும் நபர்களுக்கு அன்றாட அடிப்படை தேவைகளுக்கான ( உணவு, உறைவிடம், மருத்துவம் போன்ற ) உதவிகளை இந் நாட்டின் ஒவ்வொரு மாநகர சமூக நல அலுவலகங்களும் செய்து வருகின்றன. இந்த உதவிகளை எமது தொலைபேசி நண்பர்களும் பெற்று வருகின்றார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அதேவேளை, இவ் அரசு வழங்கும் உதவியில் மட்டும் வாழ்க்கையை ஓட்டி விடலாம் என்ற எண்ணத்தில் பொழுதை வீணாய் ஓட்டுவது அவ்வளவு நல்லதல்ல.

அருமையான நேரம் வீணாய் போகின்றது என்பதற்கும் அப்பால் பணமுமல்லவா வீணடிக்கப்படுகிறது. இவர்கள் நாளொன்றுக்கு இப்படியான தொலைபேசி சேஷ்டைகளுக்காகச் செலவிடும் பணம் இலங்கை ரூபாயில் சமார் 80 விருந்து 120 ரூபாய் வரை செலவாகிறது. ( ஊரிலுள்ள இவர்களின் குடும்பத்தினர் அன்றாட உணவுக்கு என்ன துயர் படுகிறார்களோ இவர்களுக்கே வெளிச்சம். இது தவிர நாம் நாட்டிற்கு திரும்பிப் போகும் காலத்தில் இங்கு உடம்பு நோகாமல் இருந்து விட்டு நாட்டுக்கு திரும்பி போகும் காலத்தில் எமக்காக மண் வெட்டிதான் காத்திருக்கிறதாம் என்று அண்மையில் ஒரு பத்திரிகையில் படித்த ஞாபகம்.


எனவே இங்கு உடம்பு நோகாமல் இருந்துவிட்டு நாட்டுக்கு போவோமானால் அவர்கள் தரும் மண்வெட்டியால் நாம் தோட்டம் கொத்த முடியாது எங்களெங்கள் தலைகளைத்தான் கொத்திக் கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படும் ) முடிந்தவரை ஏதாவது சிறியதோர் வேலையையாவது தேடி எடுத்துச் செய்வது நல்லது. ( கஸ்டம் தான் முயன்றால் முடியாதது எது ? )

தொலைபேசி நண்பர்களே ! உங்களுக்காக இன்று எனது நேரத்தை சிறிது செலவு செய்து வேலைவாய்ப்பு அலுவலகம் சென்று விசாரித்தில் சில விபரங்கள்

கிடைத்துள்ளன. ( இது உங்களுக்காக மட்டுமல்ல சுய நலமும் அடங்கித்தான் உள்ளது. நீங்கள் பிஸியானால் நள்ளிரவு வேளைகளில் எனக்கு தொலைபேசித் தொல்லை தர மாட்டீர்கள் அல்லவா )

வேலைவாய்ப்பின்றியோ அல்லது வேலையே இழந்து போயோ உள்ள நீங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் சென்று முதலில் உங்கள் விபரங்களை பதிவு செய்து கொள்ளுங்கள். இதனூடாக வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு மிக மிகக் குறைவாக இருப்பினும் கூட மேற் கொண்டு தொழிற்கல்வியோ அல்லது தொழிற் பயிற்சியே நீங்கள் பெறுவதற்கான ஏற்பாடுகளை அவர்கள் செய்து தருவார்கள். இப்போ இரண்டு வருடத்திற்கு மேலாய் தொடக்கப்பட்டு வெளிநாட்டவராலே வெளிநாட்டவருக்கு ஸ்தவாங்கரில் நடாத்தப்படும் " தகமையாக்கும் நிலையம் " மிகவும் பயனுள்ள பயிற்சிகளை குறுகிய காலத்திற்குள் தருகிறார்கள். இதில் சேர்ந்து பயிற்சி அடைய விரும்புவோர் வேலைவாய்ப்பு அலுவலகத்தினூடாகவேதான் விண்ணப்பிக்க வேண்டும்.

**சுமைகள் வாசகன்**



அட்டைப்படம்: எட்டுவயதுச் சிறுவன்

MURSHID ALI



# இவர்களும் மனநோயாளிகளாக வேண்டுமா ?

ஈழவிடுதலைப் போராட்டமானது தனது போக்கிலிருந்து மாறி இன்று ஒரு சிலரின் சுய நலத்திற்காக போராடி வருகின்றதையும் அவர்களின் சுகபோக வாழ்க்கைக்காக தாம் எதையும் செய்ய முடியும் என்பதையும் காட்டுமுகமாக இன்று போராட்டம் நடைபெற்று வருகிறது. அந்நிலையைத் தக்க வைத்துக் கொள்ள போராட்டமானது தமிழர்களின் விடிவுக்கான போராட்டம் என்று கூறிக் கொள்கின்றனர். இவ்வாறு தமிழர்களின் விடிவுக்கான போராட்டம் என்ற மாயையை உருவாக்கியதின் விளைவாக தாயகத்திலும் சரி புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி பெற்றோர்களும் சிறுவர்களும் அதை அங்கீகாரத்த

வண்ணம் உள்ளனர். ஆனால் மனிதனை மனிதன் வேட்டையாடும் கொடிய சம்பவங்களை நடத்தும் இவர்கள் முதலில் மற்றைய அமைப்புத் தலைவர்களைக் கொல்லத் தொடங்கி இன்று அப்பாவி முஸ்லீம் மக்களை கொன்று குவித்த வண்ணம் இருக்கின்றனர். ஆனால் இந்நிலையை ஓரளவு உணர்ந்தாலும் இது அராஜகம் என்பதாலும் தமது உயிர்களைக் காப்பதற்காகவும் பல இளைஞர்கள் படு நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதன் விளைவாக தமது போராட்டத்திற்கு போதியளவு இளைஞர்கள் இல்லாததன் காரணமாக ஆட்சேர்ப்பு முயற்சியின் பலனாக சிறுவர்களைப் போராட்டத்தில் ஈடுபடச் செய்தனர். இதில் சிறுவர்கள் எனக் குறிப்பிடுவது 13 வயத்திற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்டவர்களையே ஆகும். அவர்களின் வசந்தகாலமான இக் காலகட்டத்தில் அவர்கள் எதனைக் கண்டும் அஞ்சாத நிலை கொண்ட இச் சமயத்தில் இலங்கை இராறுவத்தினரின் தாக்குதல்களினாலும் புலிகளின் ஆயுதக் கவர்ச்சியினாலும் இன்று பலர் இவர்களுடன் இணைந்து வருகின்றனர். இவர்களுடன் சிறுவர்கள் இணைந்ததும் முதலில் அவர்களை ஆட்கொல்லி உபகரணங்களுடன் பழக விடுகின்றனர். இதனால் சிறார்களிடம் உள்ள கொஞ்சநஞ்ச பயமும் அற்றுப் போகின்றது. இவ் வேளையில் அவர்களுக்கு அரசியல் வகுப்பு என்ற போர்வையில் போராட்டமே தலைவர் சொற்படிதான் என்ற நிலைக்கு கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு சிறுவர்களை புலிகள் தமது வசப்படும் நிலையின் காரணத்தால் இன்று தமிழ் பகுதிகளில் உள்ள மாணவர்களின் கல்வி வெகுவாகப் பாதிப்படைந்த நிலையில் உள்ளது.

ஏற்கனவே படித்தவர்களை விட்டு வைக்காத புலிகள் இன்று படிக்கும் மாணவர்களையும் விட்டு வைப்பதில்லை. ஆயுதக் கவர்ச்சியினால் அவர்கள் அழைக்கப் படுகின்றனர். சிறுவர்கள் தமது படிப்பை விட்டு எமது சமுதாயத்திற்கு தமது உயிர்களை காணிக்கையாக்குகின்றனர். ஆனால் அக் காணிக்கைகளோ எமது சமுதாயத்தின் விடிவிற்வாகப் பயன் படுத்தப் படுவதில்லை. இக்



காணிக்கைகள் ஒரு சில சுயநல விரும்பிகளின் இருப்பைப் பலப் படுத்துவதற்கு பயன்படுத்தப் படுகின்றது. இந் நிகழ்வை ஓரளவு உணர்ந்து பெற்றோர்கள் அச் சிறார்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு பல முயற்சிகளை எடுத்தனார் ஆனால் அதற்கும் பாஸ் என்ற நிலையை உருவாக்கியதஏனால் இச் சிறுவர்கள் அந்நிலையிலிருந்து தப்ப முடியாது மீண்டும் புலிகளுடனேயே இணைய வேண்டும் என்ற நிலை உருவாகின்றது.

இதனுடன் முன்னைய

அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் எனவும் ஏன் சமூகவிரோதிகள் எனவும்கூறி மூளைச்சலவை செய்வதால் அச்சிறார்களுக்கு மற்றை இயக்கத்தினரை தம் எதிரிகளாகக் கணிக்க வேண்டிய நிலையில்

மாற்றப் பட்டுள்ளனர். இவர்களை புலிகள் பலரைக் கைது செய்துள்ளனரே ஏன் அவர்களைக் கைது செய்தீர்கள் என்று கேட்டால் எமக்கு எதுவும் தெரியாது எல்லாம் மேலிடத்து உத்தரவு என கூறி விடுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. இச் சிறுவர்களின் நிலை இருந்த இடத்தில் இருந்து கொண்டே இயக்கும் ஒரு கருவியைப் போல இவர்கள் மாற்றப் பட்டுள்ளனர். இத்தோடு இச் சிறுவர்கள் மனதில் முன்பு இருந்த இளைஞர்கள் எல்லாம் பயத்தால் வெளிநாடு சென்று சுக போகத்தை அநுபவிக்கின்றனர். அவர்கள் எமது போராட்டத்திற்கு எதுவும் செய்யவில்லை ஆனால் நீங்கள்தான் எம் மக்களின் விடுதலைக்காகப் போராடுகின்றீர்கள் என்று அவர்களின் மனதைக் குளிரப் பண்ணுவதனால் அவர்களும் தாம் தான் இப் போராட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறுகிறோம் என்று




புலிகளின் தலைமைகள் எதைச் சொன்னாலும் எதையுமே கேட்காது உடனேயே செயலில் இறங்கி விடுகின்றனர். அத்தோடு இவர்கள் புலிகளைப் பற்றிய செய்திகள் எதையும் அறிய முடியாதபடி ஒருபக்கச் செய்திகள் மட்டுமே வெளியிடப் படுகிறது. இதற்கு ஆதாரமாக தாயகத்தில் ஒவ்வொரு சந்தியிலும் உறுமல் என்றொரு செய்திப் பலகையும் சுதந்திரம் பறிக்கப்பட்ட நிலையில் வரும் பத்திரிகைகளும் புலிகளுக்கு

சாதகமான விடயத்தையே எழுதுகின்றனர் என்பதை அறியக் கூடியதாக உள்ளது.

இவற்றைவிட பயிற்சிக்கு என சென்றவர்கள் சிலர் அங்கு நடைபெறும் அட்டூழியங்களை பாரத்து மீண்டும் வீடுகளுக்கு புலிகளுக்கு தெரியாமல் ஒடி வர அவர்களை விடாது பின் தொடர்ந்து தேடிப் பிடித்து வலுக்கட்டாயமாக அவர்களைப் பயிற்சிக்குள்ளாக்கும் நிலையும் தற்போது நடந்து வருகிறது. இப்படி எமன் பாசக் கயிற்றோடு அலைவது போல இவர்கள் இன்று சிறார்களை தேடி அலைகின்றனர். முன்பு வேலை வாங்குவதற்காக சிறார்களைப் பிடிப்பவர்களை நாம் பிள்ளை பிடிகாரர் என்கிறோம் ஆனால் இன்று சிறார்களின் மனநிலையை மாற்றி உயிரையே பலி எடுப்பவர்களை எவ்வாறு கூற முடியும்? இவ்வாறான நிலையில் உள்ளவர்களைத்தான் இன்று மகத்தான இயக்கம் என்று பலர் புகழ் பாடுகின்றனர். ஏன் முன்பும் தற்போதும் கிட்லரை புகழ்பவர்களை நாம் நாசிகள் என்கிறோம் ஆனால் இவ் நாசக்காரக் கும்பலைச் சாரந்தவர்களை எவ்வாறு நாம் அழைப்பது ? ஏன் இவர்கள் சிறுவர்களை சிறுவர்களாக மதிப்பதில்லை ?. இதற்கு ஆதராமாக ஓர் செய்தியை நினைவு கூருகிறேன். அதாவது 17 வயது பையன் ஒருவன் ஓர் பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்தற்காக மரண தண்டனை விதித்துள்ளனர். எந்த நாட்டிலும் 18 வயதிற்கு குறைந்தவர்களுக்கு அத் தண்டனை வழங்குவது கிடையாது. இச் செய்தியின் மூலம் இவர்களின் அரக்கத்தனம் தெரிகிறது. இப்படிப் பட்டவர்களின் போக்கை ஒரளவேனும் அறிய விரும்பாது இருக்கும் புலம் பெயர்ந்த எம்மவர்கள் இனியும் இவ்வாறு இராது சற்று மறுபக்கத்தையும் பார்ப்பது மிக அவசியம். இவர்கள் தாயகத்தில்தான் சிறார்களை மயக்குகின்றார்கள் என்றால் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தான் இங்கு " தரிசனம் " என்ற

பெயரில் தமது சாகசத்தை வெளிக் கொண்டு வருகிறோம் என்று இங்கு உள்ளவர்களையும் தமது நிலையை அங்கீகரிக்க வைக்கின்றனர். அங்கு நடக்கும் யுத்தத்தில் தமக்கு சாதகமான பகுதியை மாத்திரம் வெளியில் கொண்டு வரும் இவர்கள் ஏன் பாதகமானவற்றை வெளியிடுவதில்லை ? அங்கு சிறார்கள் படும் பாட்டை வெளிக் கொண்டு வருகின்றனர் ஆனால் அவர்கள் தாம் எப்படி உள்



சௌந்த.. 92.

## சுமதி

வாங்குகின்றனர் என்பதை எடுத்துக் கூறுவது கிடையாது. அடிக்கடி படத்தின் கதாநாயகன் போன்று பிரபாகரன் வந்து செல்வார். இதனைப் பார்த்த சிறுவர்கள் இங்கும் அதற்கு அடிமையாகும் நிலை வளர்கிறது. இவற்றை எல்லாம் இங்கு ஓரளவு ஜனநாயகமான சூழலில் வாழும் பெற்றோர்கள் ஏன் அறிய முற்படுவதில்லை இவற்றிற்கு எல்லாம் முடிவு பெற்றோர் அனைவரும் தமது குழந்தைகளின் வாழ்வு பற்றி சிந்திப்பதன் மூலமே கிடைக்க வாய்ப்புண்டு●

# சினிமா நிஜமா ....



## B.லெனின்

கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.

சினிமா . . . நிஜமா . . !

நிஜம் . . . நிஜம் . . சினிமா நிஜம் !

அனைத்துக் குக்கிராமங்களிலும் பெரியவர், சிறியவர் , குழந்தைகள் குமரிகள் அனைவரையும் ஊடுருவி ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்காண இளைஞர்களை நகரத்தை நோக்கி இழுத்துவரும் ஒரு சாதனம் எப்படி நிஜமற்றதாக இருக்க முடியும் ?

ஓவியம் ,நடனம், பாட்டு , இசை , தத்துவம், அழகு , தொழிநுட்ப்ம் சினிமா ! இதில் எதுதான் பொய் ?

தாய், தந்தை, அண்ணன், தம்பி உறவுகளைப் போல இது நிஜம்.

" நான் என் இளவயதில் நன்றாகப் படித்து ஒரு டாக்டராகவோ இஞ்சினியராகவோ , அல்லது ஒரு போலீஸ் அதிகாரியாகவோ ஆக வேண்டும் என்றுதான் நினைத்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக சினிமா என்னை இழுத்துக் கொண்டது " என்று பேட்டி கொடுக்க நான்

தயாராயில்லை.

சினிமா. . ! அதுவே .. என்றென்றைக்கும் என் எதிர்கால வாழ்வாக இருந்தது.

என் பயணம் முழுக்க அதை நோக்கியே அதன் கூடவே இருந்தது. என் ஊணிலும் உறக்கத்திலும் அதுவே என்னை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது.

சதா அதன் நுட்பமான அசைவுகளின் கவனத்தில் மூழ்கிக் கொண்டிருந்த என்னை அது மூழ்கடித்து விடவில்லை. ஒரு பள்ளி இறுதித் தகுதி கூட எட்டாத என்னை அதுவே வளர்த்தது. ஆளாக்கியது, மற்றவர்களுக்கு என்னை அறிமுகப் படுத்தியது கௌரவித்தது.

உணவும் உடையும் இருப்பிடத்தையும் கூட அதுவே கொடுத்தது. என்னில் ஒன்றாக ஆகிவிட்ட ஒரு இயக்கத்தை என்னால் பொய்யாகப் பார்க்க முடியாது. ' மதுரை வீரனி ' ல் என். எஸ் கிருஸ்ணன் ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியாகத் தோன்றி , காலுக்குச் சிறியதாக உள்ள செருப்புக்காக , அந்தச் செருப்பை பழுது பார்க்காமல் , ஒரு உளியை எடுத்துக் ஒொண்டு அந்த மனிதனின் காலையே வெட்டிக் குறைக்கப் போகும் " போது எனக்குச் சிரிப்பு வந்தது.

சுற்றும் முற்றும் பார்த்தேன். அனைவரும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். !

' பாசமலர் ' கிளைமாக்ஸ் காட்சியில் அண்ணன் சிவாஜி சாகக் கிடக்கிறார். தங்கை சாவித்திரி ஓடோடி வருகிறார்! அண்ணன் அழுது கொண்டே தன் குழந்தை பருவ நினைவுகளைச் சொல்லி " கைவீசம்மா கைவீசு கடைக்குப் போகலாம் கைவீசு : மிட்டாய் வாங்கலாம் கைவீசு " இதைத்தான் இதையேதான் 25 வாரம் பாடினார். தமிழ்நாடு முழுக்க இப்பிடி ஒரு அண்ணன் வேண்டுமே என்றும் ஆண்கள் எல்லாம் இப்பிடி ஒரு தங்கை இருந்தால் என்றும் பேசிக் கொண்டார்கள்!

மக்களிடையே இந்த ஆதங்கம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால் ' பாசமலர் ' 25 நாட்களிலேயே வாடியிருக்கும்.

பறக்கும் மனிதன் சூப்பர் மேன், ஹீ மேன் , ராபின் ஹூட் எம். ஜி . ஆர் , ரஜினி காந்த் , கமல்ஹாசன் போன்ற எல்லோரினது வெற்றியும் மக்கள் தாங்கள் நினைத்திருந்த , அதற்காக

ஒழுங்கிய ஒன்றை சினிமா மூலம் இவர்கள் செய்து காட்டிய திருப்திதானே !

ஒரு டீக்கடைக்காரன் சுடச்சுட வடை சுட்டுக் கொண்டிருக்கிறான். எதிரே இரண்டு குழந்தைகள் ! காய்ந்த தலையும் வயிறுமாக கண்கள் குழி விழுந்து வடையையே பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள் ! வடை சுடப்படுகிறது. ஒரு குழந்தை வறண்டு போன தன் நாக்கைத் தடவிக் கொண்டு மெதுவாக கையை நீட்டி ஒரு வடையை எடுத்து விடுகிறது.

இதைக் கவனித்து விட்ட கடைக்காரன், அந்தக் குழந்தையின் கையை பிடித்து கொதிக்கும் எண்ணெயில் நனைத்துவிட, 'வீறிட்ட' சிறுவன் வடையை எறிந்து விட்டு கத்திக் கொண்டே ஓட ' இதைக் கண்ணுற்ற குழந்தையின் தாய் , ' சாரதா' பசியும் சோகமும் துக்கமும் மீறி அவமானத்தால் தாக்குண்டு மீண்டும் மீண்டும் அழுது கொண்டே குழந்தைகளை அடிக்கிறார்.

குழந்தைகள் அலறிக் கொண்டே ஓடுகின்றன. தாய் துரத்துகிறாள் குழந்தைகள் ஓடுகின்றன. . . . கொஞ்சம் நிறுத்துவோம்.. . . ' துலாபாரத் ' தில் சாரதாவின் கண்களில் இருந்த சோகம், ஆதரவின்மை, ஏக்கம் ! இங்கே ஒவ்வொரு கிராமங்களிலும் நகர்புற தெருவோரங்களிலும் எத்தனை தாய்மார்களின் கண்களில் அதே சோகம், அதே ஏக்கம் .. ஆதரவின்மை !

குழிவிழுந்த கண்களும் , வயிறுமாக எத்தனை குழந்தைகள் ! இந்திய தெருக்களில் எத்தியோப்பிவில், சோமாலியாவில், வியட்நாமில் . . . இன்னும் . . . இதெல்லாம் உண்மை , உண்மை, உண்மை ! உண்மையைத் தவிர வேறெதுவுமில்லை.

" காடு வெளஞ் சென்ன மச்சான் நமக்கு கையும் காலும்தானே மிச்சம் !

" இது பொய்யா

" அம்பாள் எந்தக் காலத்திடா பேசினாள் . . அறிவு கெட்டவனே " இது ...?

" சினிமா என்பது ஒரு ஏமாற்று மாயை பொய் அதன் முகத்திரையைக் கிழித்தே தீருவேன் கலையைக் கொலை செய்ய இதோ புறப்பட்டு விட்டேன் என்று அறிவித்துக்

கொண்டு 1920 களில் ஒருவர் சோவியத் யூனியனில் இருந்து எழுந்தார் ! பின்னாளில் ' போர்க்கப்பல் பொட்டம்கின் ' ' அக்டோபர் ' போன்ற உலகப் புகழ் பெற்ற திரைப்படங்களை இயக்கிப் புகழ் பெற்ற அவர் செர்கய் ஐஸன்ஸ்டின் !

அவரே பின் இப்படி எழுகிறார் : " கலையைக் கொலை செய்ய நினைத்த எனக்கு , என்ன ஆயிற்று என்று கேட்கிறீர்களா ? " கொலை செய்ய விரும்பியவனை விட, கொலை பட இருந்த நபராகிய கலையே இந்தப் போராட்டத்தில் வென்றது. கலையைக் கொலை செய்ய நினைத்த இளைஞன் கடைசியில் கலைக்கே பலியானான்!

கலையின் மந்திரவாதத்திற்குக் கட்டுப் பட்ட அவன் கடைசியில் கலைக்கு முழு நேர அடிமையாகி விட்டடான்! "

நான் சிறுவனாக இருந்த போது எங்கள் தெருவில் பட்டி மன்றம் ஒன்று நடந்தது. ஏகப்பட்ட கூட்டம். "ராமன் தான் உயர்ந்தவன் " ஒருவர் பேசுகிறார், ஆதரங்களை அடுக்குகிறார், பேச்சு காரசாரமாகிறது. " லக்சுமணன்தான் " இன்றொருவர் மறுத்துப் பேசுகிறார், நையாண்டி செய்கிறார், கை தட்டுகிறோம்! மீண்டும் ராமர் வருகிறார். . கைதட்டல் ! லக்சுமணன் வருகிறார். என் மனத்திரையில் காட்சிகள். ஒடுகிறது. கை தட்டல். . எனக்குள் ஒயாமல் ராமனா, லக்சுமணனா ராமனா !

கூட்டம் கலைந்தாகி விட்டது . தனியாக நிற்கிறேன் !

எனக்குள் ராமனா , லக்சுமணனா ? அதோ தூரத்தில் ராமன் பற்றியும், லக்சுமணன் பற்றியும் பேசி முட்டி மோதிக் கொண்டவர்கள் இருவருமே வருகிறார்கள்.

ஒருவர் தோள் மீது ஒருவர் கை போட்டுக் கொண்டபடி! ' லக்சுமணன்' சொல்கிறார்

" என்னப்பா என்ன மடக்கிறதுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கொடுத்தேன் கோட்டை விட்டுட்டியே ? " ராமர் சிரித்துக் கொள்கிறார்.

என் மனத் திரையில் பவனி வந்த கதாபாத்திரங்கள் எல்லாம் கலைந்து ஒடுகின்றன.

நம்ப முடியாத கண்களோடு அவர்களைப் பார்க்கிறேன். ராமனும்,

லக்சுமணனும் என்னைக் கடந்து செல்கிறார்கள்.

நாம் இரண்டு மணி நேரம் ஒன்றிப் பார்த்தது ? ரசித்தது ? கேட்டது ? உணர்ச்சி வசப்பட்டது. . . ?

சில நாட்களுக்குப் பிறகு என்னுடன் இருந்த அறிவுஜீவி நண்பர்கள் சிலர் பேசிக் கொண்டார்கள்:

" கலை , இலக்கியம் என்பது ஏதோ மந்திரத்தால் விழுந்த மாங்காயும் அல்ல. கலை இலக்கிய வாதிகள் என்று கூறிக் கொள்பவர்களின் அரிய கண்டு பிடிப்புக்களும் அல்ல. மாறாக அடிமை சமூக அமைப்பு, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூகங்களின் நுகத்தடியில் கீழ் ஒடுக்கப் பட்ட மக்களின் தர்க்க ரீதியான வெளிப்பாடே அது " இதை மாமேதை லெனின் சொன்னதாக சொல்லிக் கொண்டார்கள்.

எனக்குள் திரும்ப திரும்ப . .

தர்க்க ரீதியான வெளிப்பாடு!

தர்க்க ரீதியான வெளிப்பாடு!!

தர்க்க ரீதியான வெளிப்பாடு !!!

சினிமா நிஜம்!

எது பொய் ?



‘ சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற் பட்டது போல் ’ சினிமா விமர்சனத்திற்கு அப்பாற் பட்டதல்ல. சமூகத்தையும், அரசியலையும் கூட சினிமா விமர்சனம் செய்திருக்கிறது. அது தன்னைத் தானே ‘சுய விமர்சனம்’ செய்து கொள்ளும் பணிதான், சினிமா நிஜமா!

நான் ஒரு அறிவு முதிர்ச்சியோ ஆண்டாண்டு கால அநுபவ முதிர்ச்சியோ கொண்ட ஆசான் அல்ல ! இருந்தும் என்னிடம், என்னிடமும் இது கொடுக்கப்பட்டிருக்கிறது.



— நன்றி: நக்கீரன் —

# லோகநாதனின் இரண்டு கவிதைகள்.

## ஓர் தாயின் நினைவாக

சக்கு சக்கு
சத்தத்துடன்
உள்ளியும் மிளகும் சேத்து
உப்பும் கலக்க
அம்மம்மா துவைக்கின்றா. . .
பனங்கிழங்கு துவைந்துவர
நா ஊறும்.
சிறு திரணை தந்து விட்டு
மிகுதியினை அம்மாப்பாக்கு
இதுக்குள்ள என் தங்கை
புரளி செய்வாய்.
இது உனக்கு உறைக்குமென
சொல்லி வைப்பா அம்மம்மா.
முற்றத்தில் பாய் விரித்து
ஒரு பக்கம் ஒடியலுக்காய்
எதிரோரம் புழுக்கொடியல்

இக்காலை இருட்டாச்சு
இருட்டோடு கறுப்பாக
பனங்காய்கள் விழுகிறது.

இவை பொறுக்க
அம்மம்மா இன்றில்லை
நேற்றைய இருள் நேரம்
எமக்கேதும் கூறாது
அதோ அந்த மூலையில் . . .
உயிர் மூச்சும் போனது.
நான் வார்கும் மூச்சோடு
அவர் மூச்சும் கலந்திருக்க
இப் பொழுது உருவாச்சு.

கரு நிறமும் வெள்ளையும்
கலந்தொரு புகைபோக

எங்கெல்லாம் அலை மோத
பாய்ந்தும் தேங்கியும்
புதுப் புது உடைப்புக்களாய்
என் வீட்டையும்
அத்திவாரத்தோடே
அடித்துச் சென்றது.
மா மரங்களும்
வேராடு பாற
நாணற் புற்களும் சிரித்தே
தலையாட்டுகின்றன. . .
விழுந்தும் கரைந்தும்
மண்ணோடு மண்ணாக
அணுவாகி
உருக்குலைந்தே. . .
கண்களும் காதுகளும்
மூக்கும் விரல்களும்

அவை காயும். . .
சில காகம் வட்டமிட
வலை விரித்துப் போர்த்தப்படும்.

மழைக்காலம்
ஒடியற் பிட்டு துணை
இடை நேரம்
புழுக்கொடியல் துணை
சுவை சேர்க்க
தேங்காய்ச் சொட்டும்.
இடையிடையே பினாட்டுக்கும்
பெருமதிப்பு.

இவை செய்வா அம்மம்மா
இதை மறந்தா என்னம்மா
எவர் எதை மறந்தாலும்
பனம்பழம் பனங்காயாச்சு.

முற்றத்து வெய்யிலும் போய்
முள் முருங்கை பூப்பதும் போய்
பச்சை நிறப் பறவையும்போய்
என் வயிற்றில்
பசி கடிக்கும்
புகையோடு புகையாக
என் பசியும்
புகைந்தே போகிறது.
1.11. 92

## ஒரு நாள்.

நாட்கள் வாரங்களாக
நியதி தாக்கி
நகர்ந்து போகும்
நிமிடங்கள் யுகங்களாக
விரிந்து கிடக்கின்ற
இந்த நாள். .
இப்படிப் பார்க்கையில்
எம்மினத்துக்கு
வயசு அதிகாய். . .
புரட்சியும்
புது வேட்புமாய்
அணைகள் உடைப் பெடுத்து
அறுந்தும். . .
அறுக்கப்பட்டும். . .
சகல உருக்களும்
சிதைந்து சிதைந்தே
என் மனத்துள்
புதைஞ்சு போனது. .

நிமிடங்கள் யுகங்களாக
விரிந்து கிடக்கின்ற
இந்த நாள். . .
அணையுடைத்து
அபகரித்த எம் மண்ணில்
அலைமோதும் கடல்
வாழும் மீனோடும்
இந்த நாள். .

என் மனதும்
வீங்கியொரு
வெடி குண்டாய். . .
01.12.92

**லோகநாதன் . செ.**




**செவ்விந்திய இனத் தலைவராக இருந்த சியால்த் என்பவர், 1854ல் பெரியதொரு செவ்விந்திய நிலப்பகுதியை வாங்க விரும்பிய அமெரிக்க குடியரசுத் தலைவரான பிராங்லின் பியேர்ஸ் என்பவருக்கு எழுதுவதற்காக கூறிய கருத்துக்கள் இவை.**

**இயற்கையை நேசிக்கும் ஒரு மனிதனின் இதைய வெளிப்பாடு இது.**

நன்றி:

வானத்தையும் பூமியின் கதகதப்பையும் எப்படி உங்களால் வாங்கவோ விற்கவோ முடியும்? இந்த எண்ணமே எங்களுக்கு விநோதமாக இருக்கிறது.

காற்றின் புத்துணர்வும் நீரின் மினுமினுப்பும் நமக்குச் சொந்தமல்லாதபோது அவற்றை நீங்கள் எப்படி வாங்க முடியும்?

இந்தப் பூமியின் ஒவ்வொரு அம்சமும் என்மக்களுக்குப் புனிதமானது. ஒளிரும் ஒவ்வொரு ஊசியிலையும், மணல் பரந்த ஒவ்வொரு கரையும், இருண்டகாடுகளில் கவியும் பனிமுட்டமும், காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு வெட்டவெளியும், ரீங்காரமிடும் ஒவ்வொரு வண்டும் என்மக்களின் நினைவிலும் அனுவத்திலும் புனிதமானவை. மரங்களுக்குள்ளே ஓடும் ஜீவரசம், சிவப்பிந்தியனின் நினைவுகளைச் சுமந்து செல்கிறது.

இறந்துபோன வெள்ளையர்களின் ஆவிகள் விண் மீன்களிடையே உலவும்போது தாம் பிறந்த மண்ணை மறந்துவிடுகின்றன. இறந்துபோன எங்களவர்களின் ஆவிகளோ இந்த அழகான பூமியை ஒருபோதும் மறப்பதில்லை: ஏனெனில் இந்தப்பூமி செவ்விந்தியனின் தாய். நாங்கள் இந்தப்பூமியின் ஒரு அங்கம்;அது எங்களில் ஒரு அங்கம். வாசம்மிக்க மலர்கள் எங்கள் சகோதரிகள். மானும் குதிரையும் பெருங்கழுகும் எங்கள் சகோதரர்கள். பாறை மலைமுகடுகள், புல்வெளிகளில் படிந்திருக்கும் பனித்துளிகள், குதிரைக்குட்டியின் உடல்வெப்பம், மனிதன்-எல்லாமே ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை.

ஆகவே எங்கள் நிலத்தை வாங்க விரும்புவதாக வாஷிங்டனிலிருக்கும் பெருந்தலைவர் சொல்லியனுப்பும்போது எங்களிடம் மிக அதிகம் எதிர்பார்கிறார். நாங்கள் சௌகரியமாக வாழ்வதற்கென்று எங்களுக்கு ஒரு இடத்தை ஒதுக்கித்தருவதாகப் பெரும் தலைவர் சொல்லியனுப்புகிறார்: அவர் எங்கள் தந்தையாகவும் நாங்கள் அவருடைய குழந்தைகளாகவும் இருப்போமாம்: ஆகையால் எங்கள் நிலத்தை வாங்குவதென்ற உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிக்க வேண்டுமாம். ஆனால் அது ஒன்றும் எளிதானதல்ல. ஏனென்றால் இந்த நிலம் எங்களுக்குப் புனிதமானது.

ஓடைகளிலும் ஆறுகளிலும் பளபளத்து ஓடும் நீர் வெறும் நீரல்ல; அது எங்கள் முதாதையரின் ரத்தம். நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், அது புனிதமானது என்பதை நீங்கள் நினைவிலிருத்த வேண்டும். அது புனிதமானதென்பதையும், ஏரிகளின் தெளிந்த நீரில் விழும் ஒவ்வொரு நிழலும் எங்கள் மக்களின் வாழ்வில் நடந்த நிகழ்ச்சிகளையும் நினைவுகளையும் சொல்கிறது என்பதையும் உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் சொல்லித்தர வேண்டும். நீரின் முணுமுணுப்பு என் தந்தையின் தந்தையுடைய குரலாகும்.

ஆறுகள் எங்கள் சகோதரர்கள்; அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. ஆறுகள் எங்கள் தோணிகளைச் சுமந்துசெல்கின்றன; எங்கள் குழந்தைகளைப் போஷிக்கின்றன. நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், ஆறுகள் எங்களுக்கும் உங்களுக்கும் சகோதரர்கள் என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். ஒரு சகோதரனிடம் நீங்கள் காட்டும் பாசத்தை இப்போதிருந்து நீங்கள் ஆறுகளிடமும் காட்டவேண்டும் என உங்கள் குழந்தைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும்.

வெள்ளையனுக்கு எங்கள் வாழ்க்கை முறைகள் புரிவதில்லை என்பதை நாங்கள் அறிவோம். அவனுக்கு எல்லா நிலமும் ஒன்று. ஏனென்றால் இரவில் வந்து தனக்கு வேண்டியவற்றை நிலத்திலிருந்து சுருட்டி எடுத்துக்கொண்டு போகும் அந்நியன் அவன்.

இந்தப்பூமி அவனுக்குச் சகோதரன் அல்ல. பகைவன். அவன் அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றிய பிறகு ஓய்வதில்லை; அடுத்த நிலம் தேடிச்செல்கிறான். அவன் தன்னுடைய தந்தையின் கல்லறையை விட்டுச் செல்கிறான். அதைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை. அவன் தன் குழந்தைகளிடமிருந்து நிலத்தை அபகரிக்கிறான். அதைப்பற்றியும் அவனுக்கு அக்கறையில்லை. தந்தையின் கல்லறையும், குழந்தையின் பிறப்புரிமையும் மறக்கப்பட்டுவிட்டன. தனது தாயான பூமியையும் சகோதரனான வானத்தையும், ஆடுகளைப்போலவோ பிரகாசமான பாசிமணிகளைப்போலவோ விலைக்கு வாங்கப்படுவதற்கும், கொள்ளையடிக்கப்படுவதற்கும், விற்கப்படுவதற்குமான பொருளாகவே அவன் கருதுகிறான். அவனுடைய பசி இந்த நிலத்தின் வளத்தை விழுங்கி பாலைவனத்தையே விட்டுவைக்கும்.

எனக்குத் தெரியவில்லை; எங்கள் வாழ்க்கை முறைகள் உங்களுடைய வாழ்க்கைமுறைகளிலிருந்து மாறுபட்டவை. உங்கள் நகரங்கள் செவ்விந்தியனின் கண்களைக் குத்துகின்றன. ஒருவேளை செவ்விந்தியன் காட்டுமனிதன், அவனுக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதால் இப்படி இருக்கலாம்.

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடமேதும் இல்லை; வசந்த காலத்தில் இலைகள் துளிர்ப்பதையோ ஒரு வண்டின் சிறகு சரசரப்பதையோ கேட்கக்கூடிய இடமேதும் இல்லை. ஒருவேளை இதுவும் நான் காட்டுமனிதன், எனக்கு இதெல்லாம் புரிவதில்லை என்பதாலோ என்னவோ. நகரங்களில் இரைச்சல் செவிகளையே அவமானப்படுத்துவதாக இருக்கிறது. ராக்குருவியின் ஏகாந்தக் குரலையோ இரவில் குளத்தைச் சுற்றி தவளைகள் நடத்தும் வாக்குவாதங்களையோ கேட்கமுடியாத மனிதனின் வாழ்வென்ன வாழ்வு? நான் ஒரு செவ்விந்தியன். இதெல்லாம் எனக்குப் புரிவதில்லை. குளத்து நீரைத் தொட்டபடி விரையும் காற்றின் மென்மையான ஒலியும் நண்பகல் மழையினால் கழுவப்பட்ட அல்லது பைன் மரத்தினால் மணமூட்டப்பட்ட காற்றின் சுகந்தமும் செவ்விந்தியனுக்கு விருப்பமானவை.

காற்று, செவ்விந்தியனுக்கு அருமையானது. ஏனெனில் விலங்கு, மரம், மனிதன் - எல்லாமும் பகிர்ந்துகொள்வது ஒரே காற்றைத்தான். வெள்ளையனோ தான் சுவாசிக்கும் காற்றைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. சிறிதுசிறிதாகச் செத்துக்கொண்டிருக்கும் மனிதனைப்போல, நாற்றத்தை உணரும் சக்தியற்றவனாக அவன் இருக்கிறான். ஆனால் நாங்கள் எங்கள் நிலத்தை உங்களுக்கு விற்பதானால், இந்தக்காற்று எங்களுக்கு அருமையானது என்பதையும், அது, தான் வாழவைக்கும் எல்லா ஜீவராசிகளுடனும் தன் ஆன்மாவைப் பகிர்ந்து கொள்கிறது என்பதையும் நீங்கள் நினைவில் கொள்ளவேண்டும். எங்கள் பாட்டனாருக்கு அவருடைய முதல்மூச்சைத் தந்த காற்று, அவருடைய இறுதிமூச்சை வாங்கிக் கொள்ளவும் செய்கிறது. நாங்கள் உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்பதானால், புல்வெளிகளின் மலர்களால்

இனிமையாக்கப்பட்ட காற்றை அனுபவிப்பதற்கு வெள்ளைக்காரனும் போகக்கூடிய ஒரு தனியான, புனிதமான இடமாக நீங்கள் அதனை வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆக, எங்கள் நிலத்தை வாங்கும் உங்கள் யோசனையை நாங்கள் பரிசீலிப்போம். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடிவு செய்தால், நான் ஒரு நிபந்தனை விதிப்பேன்: வெள்ளையன் இந்த மண்ணிலுள்ள விலங்குகளைத் தனது சகோதரர்களாக நடத்த வேண்டும்.

நான் ஒரு காட்டுமனிதன்; வேறு எந்த வழியும் எனக்குப் புரிவதில்லை. ஓடும் ரயிலில் இருந்து வெள்ளைக்காரன் சுட்டுக்கொன்ற ஓராயிரம் எருமைகள் புல்வெளியில் கிடந்து அழுகுவதை நான் பார்த்திருக்கிறேன். நான் ஒரு காட்டுமனிதன்; உயிர்வாழ்வதற்காக மட்டுமே நாங்கள் கொல்லும் எருமையைவிட புகை கக்கும் இரும்புக்குதிரை எப்படி அதிக முக்கித்துவம் பெற்றிருக்கும் என்பது எனக்குப் புரியவில்லை.

விலங்குகள் இல்லையேல் மனிதன் எங்கே? விலங்குகள் எல்லாம் மறைந்துவிட்டால், மனிதன் மிகுந்த தனிமைக்குள்ளாகி மடிந்துவிடுவான். ஏனென்றால், விலங்குகளுக்கு என்ன நேர்கிறதோ அது விரைவில் மனிதனுக்கு நேரும். எல்லாமே ஒன்றோடு ஒன்று இணைந்தவை.

உங்கள் குழந்தைகளின் பாதங்களின்கீழ் உள்ள நிலம் எங்கள் பாட்டனாரின் சாம்பல் என்பதை அவர்களுக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும். எங்கள் இனத்தவரின் ரத்தத்தாலும் சதையாலும் செழுமைபெற்றது இம்மண் என்பதை உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். அப்போது அவர்கள் இம்மண்ணை மதித்து நடப்பார்கள். இப்பூமியே நம்தாய் என்பதையே நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறோம், அது போல நீங்களும் உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள். பூமிக்கு என்ன நேர்கிறதோ அது பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். பூமியின்மீது மனிதர்கள் காறி உமிழ்வது தங்கள் மீதே காறி உமிழ்ந்து கொள்வதாகும்.

நாங்கள் இதனை அறிவோம்: பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல, மனிதன்தான் பூமிக்குச் சொந்தம். நாங்கள் இதனை அறிவோம். ஒரு குடும்பத்தை ஒன்றிணைக்கும் ரத்தத்தைப்போல் எல்லாப் பொருட்களும் ஒன்றோடொன்று இணைந்துள்ளன. பூமிக்கு நேர்வதெல்லாம் பூமியின் மைந்தர்களுக்கும் நேரும். உயிர்களாகிய வலையை மனிதன் பின்னவில்லை. அவன் அதில் ஓர் இழையே. வலைக்கு என்ன செய்கிறானோ அதைத் தனக்கும் செய்து கொள்கிறான்.

எந்த வெள்ளையனுடன் கடவுள் கூடவே நடந்து வந்து, ஒரு நண்பனோடு நண்பன் பேசுவதுபோலப் பேசவும் செய்கிறாரோ அந்த வெள்ளையனும் கூட பொதுவான ஊழினின்று தப்பமுடியாது..... எப்படியிருந்தாலும் நாம் சகோதரர்களாக இருக்கலாம்.

 தொடர் 32ம் பக்கம்

# எதிரொலி



எதிரொலி

நோர்வேக்கு வரும் வெளி நாட்டவர்களில் அனேகமானவர்கள் கல்வியையும், தொழில் அனுபவத்தையும் கொண்டிருந்தாலும் இவற்றை இங்கு பயன்படுத்தத் தேவையான உதவிகளை இவர்களுக்கு உதவி நிறுவனங்கள் வழங்குவதில்லையென்றே சொல்லலாம். இதனால் வெளி நாட்டவர்களுக்கு நோர்வேஜிய கலாச்சாரத்தையோ, வேலைவாய்ப்புச் சம்பந்தமான அனுபவங்களையோ அறிந்திருக்க முடிவதில்லை. இதனால் நோர்வே பல திறமைசாலிகளை இழந்துள்ளது எனக்கூறுவது தப்பில்லை. இவற்றை அடிப்படையாக வைத்து வெளி நாட்டவர்களைத் தகமையாக்கும் மையமொன்றை வெளி நாட்டவர்களான அற்றியானாவும் மக்டலேனாவும் உருவாக்கியுள்ளனர். அவர்களை நாம் சந்தித்தோம்.

சுமை: இந்த வெளி நாட்டவர்களைத் தகமையாக்கும் மையத்தை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்? இது அ.ஓ.எஃப் (தொழிலாளர் தகவல் அமைப்பு) இன் ஒரு பிரிவா? அல்லது எந்த நிறுவனத்தின் கீழ் இயங்குகிறது?

அற்றியா: பொதுவாக வெளி நாட்டவர்களுக்கு வேலை எடுப்பதில் இருக்கும் சிக்கல்களும், இது சம்பந்தமான எங்கள் தனிப்பட்ட அனுபவங்களும் வெளிநாட்டவர்களுக்கு உதவும் வகையில் இம் மையத்தை உருவாக்க உந்துசக்திகளாயின. நாம் இருவரும் இம் மையத்தை உருவாக்க ஒரு திட்டத்தை தயாரித்தோம். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத்



அற்றியானா

தேவையான கோட்பாடுகளையும் எண்ணத்தையும் முன்வைத்தோம். நாங்கள் அறிந்திராத பல வேறுபட்ட பகுதிகளில் உதவ அரசுசார்பான நிறுவனமொன்றைத் தேட முயன்றோம். இது நீண்டகாலத்திட்டமாக அமைந்தது. பல கல்விக்கூடங்களின் ஆலோசனைகளும், சில தனி நபர்களின் வழிகாட்டல்களும் எங்களுக்கு உதவின. இத்திட்டத்தை வேலைவாய்ப்பளிக்கும் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தினோம். அவர்கள் இதை ஏற்றுக்கொண்டார்கள். நாங்கள் இம் மையத்தை 1991 மார்கழி ஆரம்பித்தது முதல் அ.ஓ.எஃப் உடன் அவர்களுக்கும் எங்களுக்கும் நன்மை தரும் வகையில்

நெருங்கிய தொடர்பை கொண்டுள்ளோம். நிர்வாகத்தேவைகள் அவர்களிடமே பெறப்படுகிறது. ஆயினும் இது ஒரு சுயாதீனமான ஸ்தாபனமே.

சுமை: எவ் வகையில் நீங்கள் செயற்படுகிறீர்கள் என்று கூறமுடியுமா?

மக்ட: இதுவரை நாங்கள் ஒரு விளக்கமளிக்கும் வகுப்பையே நடாத்துகின்றோம். இது எவ்வாறு வேலை தேடுவது என்பது சம்பந்தமான வழிகாட்டலைக் கொண்டிருக்கும். முதலாவது வகுப்பு 1992 தையில் தொடங்கியது. இது ஐந்து கிழமைகளைக் கொண்ட வகுப்பாகும். இங்கு நாங்களும் எங்களுடன் ஒரு நோர்வேஜியரும் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றோம்.

சுமை: இவ் வகுப்புகளுக்கான அனுமதிகள் எவ்வாறு வளங்கப்படுகின்றன? அனுமதிக்கான அடிப்படைத் தாராதம் என்ன?

அற்றியா: இவ் வகுப்புகளுக்கு அனுமதிப்பதற்கு நோர்வேஜிய மொழிக் கல்வி 500மணித்தியாலங்கள் இருந்தால்ப் போதும். இவ் வகுப்புக்கு வந்தவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தினூடக வந்ததனால் அவர்களே தாராதரம் பார்த்தார்கள். இப்போது எங்கள் விளம்பரங்களைத் தொடர்ந்து பலர் இங்கு வந்து அனுமதி கேட்கிறார்கள், அவர்களை பதிவு செயவதற்காக அங்கு அனுப்புகிறோம்.

சுமை: சென்ற வருட வகுப்புகள் நிறைவாக அமைந்தனவா? வகுப்புகளில் கலந்துகொண்டவர்களுக்கு வேலை வாய்ப்புகள் எப்படியிருந்தன?



மக்டலேனா

மக்ட: இங்கு வந்தவர்களில் 80 சதவிகிதமானவர்களுக்கு இடம் கிடைத்தது. இதில் தொழிற்பயிற்சி இடங்கள், ஒப்பந்த அடிப்படையில் வேலை, நிதந்தர வேலை, உயர் கல்வி என்பன அடங்கும். அப்படி எதுவும் கிடைக்காதவர்கள்கூட ஓயந்து போகவிலை தம்மால் இயன்றளவு முயற்சியுடந்தான் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுடன் தொடர்புகளை வைத்துள்ளார்கள். எனவே வகுப்புகள் நிறைவாக அமைந்தன என்றே கூறலாம்.

சுமை: வேலை வாய்ப்புகளை நீங்கள் தேடிக் கொடுக்கிறீர்களா?

அற்றியா: நாங்கள் தனிப்பட்ட ரீதியில் ஒவ்வொருவருடனும் கதைத்து அவர்களுக்கு ஏற்ற வகையில் தொழில் சம்பந்தமான வழிகாட்டலைச் செயகின்றோம். நாங்கள் இங்கு வருபவர்களைக் குழந்தைகளாக நினைக்கவில்லை. அவர்களே தமக்கு ஏற்ற இடங்களில் வேலை தேடிக் கதவைத்தட்டவேண்டும்.

சுமை: இங்கு வருபவர்கள் சிலர் தமக்கு நிதந்தா வேலை கிடைக்காததையிட்டு குறை கூறுவார்களல்லவா அவர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

மக்டா: இங்கு வருபவர்கள் எல்லோருக்கும் போதிய மொழிப்பயிற்ச்சி இல்லை. இவர்கள் மொழி அறிவை வளர்க்கவும் வேலையிடங்களின் நடைமுறைகளைத் தெரிந்துகொள்ளவும் தொழிற்பயிற்சி இடங்கள் மிகவும் உதவுகின்றன. இது ஓரளவுக்காவது சிறந்ததென்றே கருதுகின்றோம்.

சுமை: இறுதியாக ஒரு கேள்வி. இங்கு வகுப்புகளில் கலந்துகொள்ளும் தமிழர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?


அற்றியா: திறமைசாலிகள்; பழகுவதற்கு இலகுவானவர்கள்; விதிமுறைகளை கடைப்பிடிப்பதில் சிறந்தவர்கள்.

27ம் பக்கத் தொடர்ச்சி...

பார்ப்போம். ஒன்றுமட்டும் நாங்கள் அறிவோம்; இருவர் கடவுளும் ஒன்றே. இதை வெள்ளையன் ஒரு நாள் தெரிந்து கொள்வான். எங்கள் நிலத்தை உங்கள் உடைமையாக்கிக்கொள்ள விரும்புவதுபோல் அவரையும் உங்களது உடைமையாக்கிக்கொள்ள இப்போது நீங்கள் நினைக்கலாம். ஆனால் உங்களால் முடியாது. அவர் மனிதனின் கடவுள். சிவப்பன்மீதும் வெள்ளையன்மீதும் அவர் ஒரே மாதிரிக் கருணைபொழிகிறார். இப்பூமி அவருக்குப் பிரியமானது. பூமிக்கு இழைக்கப்படும் கேடு அதைப் படைத்தவருக்கு இழைக்கப்படும் அவமதிப்பாகும். வெள்ளையர்களும் ஒரு நாள் மறைந்தாக வேண்டும்; ஒரு வேளை மற்ற இனத்தவரை விட முன்னதாக. உன் படுக்கையை நீ அசுத்தப்படுத்தினால், ஓரிரவு உன் கழிவிலேயே மூச்சுத்திணறிச் சாவாய்.

ஆனால் நீங்கள் அழியும்பொழுது, இந்நிலத்திற்கு உங்களை அழைத்து வந்து , ஏதோ ஒரு சிறப்பு நோக்கத்தில் இந்நிலத்தின் மீதும் செவ்விந்தியன் மீதும் உங்களுக்கு ஆதிக்கத்தைத் தந்த கடவுளின் வல்லமையால் எரிக்கப்பட்டு பிரகாசமாய் ஒளிர்வீர்கள். அந்த ஊழ்வினை எங்களுக்குப் புதிராக இருக்கிறது. ஏனெனில் எங்கள் எருமைகளெல்லாம் கொல்லப்படும் போதும், காட்டுக்குதிரைகள் அடக்கப்படும்போதும், காட்டின் அந்தரங்கப் பகுதிகள் ஏராளமான மனிதர்களின் வாடையால் நிரப்பப்படும்போதும், செழிப்பான மலைகளின் காட்சி,பேசும் கம்பிகளினால் மறைத்துக் கெடுக்கப்படும்போதும் எங்களுக்குப் புரிவதில்லை. புதர்க்காடு எங்கே? மறைந்துவிட்டது. கழுகு எங்கே? மறைந்துவிட்டது. வாழ்வின் முடிவு; உயிர் பிழைப்பின் தொடக்கம்.

# காத்தார் மூத்தார் சந்திப்பு



மூத்தார் : என்ன காணும் காத்தார் கண்டும் காணாத மாதிரி போறீர் ?

காத்தார் : இருந்தாலும் அண்டைக்கு நீர் என்னைப் பற்றி அப்பிடிச் சொல்லியிருக்கக் கூடாது காணும்.

மூத்தார் : ஏனப்பா என்ன நடந்தது ? ஒண்டும் விளங்கேல்ல.

காத்தார் : இல்லையப்பா . . நீர் இப்பிடியெல்லாம் சொல்லுவீரெண்டு நான் கனவிலும் நினைக்கேல்ல. எவ்வளவு காலம் நாம பழகிறம். இண்டைய நேற்றைய பழக்கமா ?! கிட்டத் தட்ட ஒரு வருச பிறன்சிப். நீர் என்னட்ட நேர பிடிச்சு உரிமையோட சொல்லியிருக்கலாம் பிழை விடுகிறீரெண்டு. அத விட்டுப் போட்டு ஏரம்பலத்தார் வீட்டு பேர்த்தேப் பாட்டியில அவ்வளவு சனத்துக்கும் முன்னால என்னப் பற்றித் தப்பாக் கதைச்சிருக்கிறீராம்.

மூத்தார் : உதென்ன கோதாரியப்பா. . நீரேன் உப்பிடி அறம் புறமாக் கற்பன பண்ணுறீர்.. ?! ஆர் சொன்னது உம்மப் பற்றிக் கதைச்சனானெண்டு.. நீர் என்னப்பா ? ஒண்ட மட்டும் நீர் விளங்கிக் கொள்ளும்; எங்கட பிறன்சிப் இங்க கனபேருக்கு வயித்தெரிச்சலக் கிண்டுது. எப்பிடி எங்களப் பிரிக்கலாம் எண்டு இங்க கன பேர் கங்கணம் கட்டிக் கொண்டு திரியினம். காத்ஸ்! இதமட்டும் தான் நான் சொல்லுவன் அவனிவன் சொல்லுற கதையள நீர் முழுக்க முழுக்க நம்பிற பழக்கத்தக்க இனியாவது விடுமப்பா. எங்களுக்கெங்களுக் கெண்டு சுய புத்தி இருக்கு. . . உம்மப் பற்றியும் என்னட்ட எத்தினையோ பேர் வந்து அண்டி வைச்சிருக்கினம். அதையெல்லாம் நான் நம்பினனானே ? இல்லையே ஏன் ? உம்மப் பற்றி எனக்கு நல்லாத் தெரியும். அதோட என்ர சுய புத்தியட்டக் கேட்டுத் தான் நான் முடிவெடுக்கிறனான். அதே மாதிரி உமக்கும் ஒண்டு மட்டும் நான் சொல்லுறன் இவங்கள் சுமைப் பெடியள் பெரிய பெரிய கொட்டை எழுத்தில போடுவாங்கள் ' எப் பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு, எண்ட மாதிரி கருத்துச் சொல்லுறவனட்டக் கவனமாக் கேளும். அதுக்குப் பிறகு உம்மட சுய அறிவால சிந்திச்சு சரியான முடிவ எடும். இதைத்தான் நான் திரும்பத் திரும்பச் சொல்லுவன் காணும்.

காத்தார் : சரியப்பா சரி எனக்குத் தெரியுமப்பா நீர் சொல்லியிருக்க மாட்டீரெண்டு. இருந்தாலும் எனக்கு மனங் கேக்கயில்லக் காணும் . திரும்பத் திரும்ப ரெண்டு மூணுபேர் வந்து சொன்னார்களப்பா நம்பீட்டன்.

மூத்தார் : அப்பிடித்தானப்பா ஒரே பொய்யத் திரும்பத் திரும்ப உரத்துக் கத்தினால் உண்மையாப் போயிடும் எண்டமாதிரி எங்கட சனங்கள் அடுத்தவனக் கெடுக்கிறதுக்கு எதை வேணுமெண்டாலும் செய்யுங்கள்.

காத்தார் : சரியப்பா அதுகள விடு. எங்க உதில நிக்கறீர். இந்தக் குளிருக்க. அதுவும் சமர் யக்காவோட.

மூத்தார் : ரெலிபோன் பில் மூவாயிரம் கட்ட வேணுமப்பா அதுதான் மூண்டாப் பிரிச்சு ஆயிரம் ஆயிரமா மூணுதரம் கட்டுறதுக்கு கேட்டுப் பாக்கலாம் எண்டு நிக்கிறன்.

உமக்குப் பரவாயில்லையப்பா. இந்த முறை எனக்கு பதின் மூவாயிரத்துச் சொச்சம் வந்திக்குதப்பா. தலை விறைக்குது.

மூத்தார் : எங்கயப்பா இவ்வளவுக்கு எடுத்தனீர் ?

காத்தார் : போன மாதம் வேலாயுதம் மாமாவும் மனுசியும் கொழும்பு வந்து நிண்டினம் எண்டு ஒரு தடவை எடுத்தன். அந்தாள் பெரிய அக்கறையோட சொல்லிச்சுது. தம்பி உமக்கு அநியாயமா காச போகுமடாப்பா. நம்பரத்தா நான் அடிக்கிறன்றெண்டு. என்ன இந்தாள் இவ்வளவு அக்கறையாக் கேக்கிறாரேயெண்டு உள்ளுக்குள்ள சந்தோசப் பட்டுக் கொண்டு என்ர நம்பரக் குடுத்திட்டன். அந்தாள் அங்கயிருந்து ஒவ்வொரு நாளும் எனக்கு எடுத்து மணித்தியாலக் கணக்காக் கதைக்கும். எனக்கெண்டால் பெரிய சந்தோசம். இப்ப என்னடாண்டால் ரெலிபோன் பில் வந்தாப் பிறகு தான் தெரிச்சுது அந்தாள் அங்கயிருந்து கலைட் கோல் எடுத்திருக்கிறாரெண்டது.

மூத்தார் : அவள் உம்மட்டக் கேட்டிருப்பாளேயப்பா. கலைக்ட் கோல் வந்திருக்கு. அக்சப் பண்ணுறீரோ எண்டு ?

காத்தார் : அவள் ஏதோ நொஸ்கில கேக்கிறவள் தானப்பா எனக்கு ஒரு அறுப்பும் விளங்கிறேல்ல. யா.. . யா எண்டு சொல்லிப் போடுவன். கோதாரியில போனது இப்பதானேய்யா எல்லாமே விளங்கிச்சுது எல்லாத்துக்கும் யா. . யா எண்டப் பிடாதெண்டு.

மூத்தார் : இப்பிடித்தானப்பா எங்கட சனம் கொஞ்சம் கூட யோசினை இல்லாததுகள். செலவ சித்தாயங்கள் கூடின இடத்தில இருக்கிறாங்களே . . ஏதாவது அவசர தேவையெண்டால் மட்டும் ரெலிபோன் எடுக்கலாமேயெண்டு அங்க லொட்ஜ்களில நிக்கிற எங்கட சனம் உணர வேணுமப்பா சும்மா குரலக் கேக்க ஆசையாக் கிடக்குதெண்டு எடுத்து மணித்தியாலக் கணக்கில கதைச்சா நிலப

எங்க போம் ?! நாரி முறிய கழுவுற காசை அப்பிடியே பில் கட்டி அற வேண்டியதுதான். இந்தக் காசுகஎ மிச்சம் பிடிச்சுத்தான் தங்களுக்கு அனுப்பப் போறாங்களெண்டு ஏன்தான் விளங்கிச கொள்ளுதுகளில்லையோ தெரியாது. . . ! எனப்பா நான் கதைச்சுக் கொண்டிருக்கிறன். நீர் அங்காலிட பக்கம் திரும்பி நிண்டு சங்கடப் படுகிறீர்.


காத்தார் : அதெல்லாம் ஒண்டும் இல்லைக் காணும் அதில போற பொடியனோட சின்ன கொழுவலொண்டு அதுதான் சத்தம் போடாதேயும்ப்பா.

மூத்தார் : என்னப்பா உமக்கு எங்க போனாலும் எல்லாரோடையும் கொழுவல் தானா. இங்க வந் பிறகும் இந்த சில்லறைக் கொழுவல்கள விடமாட்டியளே.

காத்தஏர் : நான் மட்டுமில்லக் காணும். இங்க எங்கட சனம் எல்லாம் ஊர் கோபங்களையும் இங் சாதிக்கிறலதான் குறியா நிக்குதுகள்.

மூத்தார் : ஒருத்தர ஒருத்தர் இப்பிடியே நெடுகலும் குற்றம் சொல்லாமல் தாங்கள் தாங்கள் திருந்தினா எல்லாம் சரி வருமப்பபா.

**(அடுத்த இதழில் காத்தரும் மூத்தாரும் கலியாண வீடொன்றில் சந்திக்கின்றனர்)**



# பெரும் பிசாசு

கனவானின்

கனவுத் தொடர் 2

எனக்கு நல்லா ஞாபகமிருக்கு. நான் செத்துப் போனது ஒரு சனிக்கிழமைதான். யேசுநாதர் செத்த பெரிய வெள்ளிக்கிழமைக்கு அடுத்த நாள் அல்லேலூயாச் சனி . அந்த அல்லேலூயாச் சனிக்கிழமைதான் நானும் செத்தனான். நானும், வட்டக்கச்சி பொடியன் முருகானந்தனும் எங்கட பயரிங்காம்ப் சென்றிக்கு நிண்ட இடத்தில அவன்ர எஸ். எம். ஜி கோக்கிங் கான்ரில் தட்டுப்பட்டு மிஸ் பயராகி என்ர வயித்தில மூணு குண்டு பாஞ்சுது. கொஞ்ச நேரம் மட்டும் துடிச்சுக் கொண்டு கிடந்திட்டு என்ர கடைசி மூச்ச விட்டன்.

என்ர பிரேதத்தில மில்ற்றி உடுப்பெல்லாம் போட்டு வடிவா வெளிக்கிடுத்தி மெயின் காம்பில கொண்டு போய் சனங்களின்ர பார்வைக்கு வச்சினம். என்ர பிரேதப்

பெட்டி வைச்சிருந்த இடத்தில ரெண்டு பக்கத்திலையும் ரெண்டு பெடியள் அதிரடிப் பட உடுப்புப் போட்ட படி ஏகே யோட ஆட அசையாம நிண்டினம். என்ர நெஞ்சுக்கு மேல எங்கட இயக்க கொடி சிவப்பு நிறத்தில போத்தியிருந்தது. நிறையப் பூமாலை எல்லாம் எனக்கு மேல போட்டு மூடி இருந்தது. எனக்கு போட்டிருந்த மில்ற்றி உடுப்பும் சப்பாத்தும் அந்தப் பூமாலையளுக்குள்ளையும், கொடிக்குள்ளயும் மறைஞ்சு கிடந்தது. எனக்குச் சரியான கவலையாக் கிடந்தது. நிரையில , வரிசையா வந்து என்னப் பாக்கிற சனத்துக்கு என்ர மில்ற்றி உடுப்பும் சப்பாத்தும், சப்பாத்தும் தெரியவே தெரியாது. என்ர முகம் மட்டும்தான் தெரியும். எனக்கெண்டால் பேக் கவலையாக் கிடந்தது. இருந்தாலும் நான் போட்டு இருக்கிற மில்ற்றி தொப்பிய எல்லாச் சனமும் பாத்திருக்கும் . ஆன படியால் மில்ற்றி உடுப்புத்தஎன் போட்டிருக்கிறெண்டு கட்டாயம் சனமும் விளங்கிக் கொண்டிருக்கும். திடீரெண்டு சனங்களுக்குள்ள பெரிய அல்லோல கல்லோலமாக் கிடந்தது. என்னடாயிதெண்டு யோசிச்சன். என்ர அம்மாவும், தங்கச்சியும் ஓடி வந்து எனக்கு மேல விழுந்து குளறிச்சினம்.

" என்ர பிள்ள அறுந்து போவார் சாகக் கொண்டுட்டாங்களே. . என்ர செல்லத்தச் சுட்டுத் திண்டுட்டாங்களே " எண்டு அம்மா ஒப்பாரி வைச்சா.

" அண்ணா அண்ணா எழும்பிப் பாரண்ணா தங்கச்சி வந்திருக்கிறன் எழும்பிப் பாரண்ணா" எண்டு என்ர தங்கச்சி என்ர முகத்தத் தடவி கெஞ்சி அழுதுச்சு. எனக்குத் தாங்க ஏலாமக் கிடந்தது. முருகானந்தனில பயங்கர கோபங் கோபமா வந்தது. அவன் தன்ர எஸ். எம்.யிய கோக் பண்ணாமல் கவனமா வச்சிருந்திருப்பானாயிருந்தால் இப்ப என்ர அம்மாவும் தங்கச்சியும் இப்பிடி அழுதிருக்க மாட்டினம் தானே?

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை. யேசுநாதர் உயிர்த்த நாள். ஒவ்வொரு வருசமும் உயிர்த்த ஞாயிறுக்கு புது உடுப்புப் போட்டு, படத்துக் கெல்லாம் போவன். இந்த வருசம் நான் செத்துப் போனன்.

மத்தியான் ஒரு மணி போல வடிவாச் சோடிச்ச எல்வ் ட்றக்கில என்ர பிரேதப் பெட்டிய ஏத்திச்சினம். என்ர

பெரிய கட்டவுட்டொன்றும் அந்த ட்றக்கில கட்டியிருந்தது. வடிவாயிருந்தது எண்டு சொல்லேலாது. ஹரன் தியட்டரில நூல்வேலி படம் ஓடேக்க சரத்பாபுவ சப்ப மூஞ்சியாக் கீறி தொங்க விட்ட மாதிரி கிடந்தது.

என்ர பிரேதத்த ஏத்தியிருந்த எல்வ் மெல்ல மெல்ல ஊர்ந்தது. எல்வ் டற்க்குக்கு முன்னால லவுட்ஸ்பீக்கர் பூட்டின ஒரு லாண்ட்மாஸ்ரர் எனவுன்ஸ் பண்ணிக் கொண்டு போய்க் கொண்டிருந்தது.

இடைக்கிட எங்கட இயக்கப் பெடியள் செத்தாலும் வழமையாப் போடுற குன்னக்குடி வைத்திய நாதன்ர வயலின் சோகமா அழுது கொண்டிருந்தது. லாண்ட் மாஸ்ரருக்கு முன்னுக்கு நிறையச் சனம் சோகம் மாதிரிப் போய் கொண்டிருந்ததுகள். அம்மாவையும் தங்கச்சியையும் என்ர பிரேதம் ஏத்தி இருந்த ட்றக்கில பெடியள் ஏத்தி விட்டிருந்தங்கள். அதுகள் ரெண்டும் பாவம். நேற்று முழுக்க அழுதழுது ரெண்டின்ர முகங்களும் வீங்கிப் போயிருந்தது.

மெயின் காம்பில இருந்து எங்கட சவக்காலைக்குப் போற வழி முழுக்க குருத்தோலைச் சோடனையளும், வாழ மரங்களும், இடைக்கிட என்ர கட்டவுட்டுகளுமா இருந்தது. கட்டவுட்டுகளப் பாக்கப் பாக்கப் பெரிய ஆச்சரியமா இருந்தது. இவ்வளவு காலமும் எனக்குத் தெரிவே தெரியாது நான் லெப்டினன்ட் எண்டு. லெப்டினன்ட் அன்ரனி எண்டு என்ர படத்துக் கீழ சிவப்பு மையால எழுதிக் கிடந்தது. " சனத்தப் பேய்க் காட்டுறாங்கள் " எண்டு எனக்குள்ள நினைச்சுக் கொண்டன்.

எங்கட சவக்கால. புதுக் கிடங்கு. என்னப் புதைக்கப் போற சவக்குழியச் சுத்தி சனங்களெல்லாம் நிண்டுது. என்ர சவப் பெட்டிய ட்றக்கில இருந்து இறக்கி என்னப் புதைக்கப் போற, என்ர புதை குழிக்கு அருகில வச்சினம். எங்கட இயக்கப் பேச்சாளர் பேசத் தொடங்கினார். நல்லாப் பேசுவாரெண்டு கேள்விப் பட்டிருக்கிறன். ஆனால் இதுவர காலமாகியும் அவர்ர பேச்ச நான் கேக்கவே இல்லை. இந்தியாவில எல்லாம் எத்தனையோ மேடவளிய பேசி இருக்கிறாராம்.

விடுதலைப் போராட்டம் எண்டு பேசத் தொடங்கி என்னப் பற்றியும், என்ர சாவப் பற்றியும் பேசத் தொடங்கினார்.

ஏதேதோ தாக்குதலில எல்லாம் நான் கலந்து கொண்டனானாம். எதிரியளின்ர கனக்க முகாமுகள தவிடு பொடியாக்கினனானாம். வன்னிக் காட்டுக்குள்ள எல்லாம் எத்தினையோ நாளா சாப்பாடு தண்ணி இல்லாமக் கிடந்து எதிரியள வேவு பார்த்து தாக்குதலுக்குத் திட்டம் போட்டனானாம் எண்டெல்லாம் புளுகித் தள்ளினார். ஆனயிறவுக்கங்கால இதுவர நான் போனதே கிடையாது. எப்பிடி வன்னிக் காட்டுக்குள்ள வேவு பாத்திருப்பன். வன்னி இப்ப நல்லாருக்கு வந்திற்றுதெண்டு பேச்சாளர் நினைச்சிட்டார் போல கிடக்கு. ஒரு கிறனைட் அல்லது மிஞ்சி மிஞ்சிப் போனா ஒரு எஸ். எம் யியோட சென்றிக்கு மட்டும்தான் நிண்டிருக்கிறன். புளுகு விளம்பரங்களால எப்பிடியெல்லாம் சனங்கள பேய்க் காட்டிறாங்கள் எண்டது இப்பத்தான் எனக்கு விளங்கிச்சுது.

முன்னணிப் பேச்சாளர் பேச்சு முடிஞ்சவுடனே படபடவெண்டு மரியாத வெடி வெடிச்சது. கொஞ்ச நேரத்துக்குள்ள என்ர பிரேதத்த சவக்குழிக்குள்ள வச்சு மண்ணால மூடிப் போட்டு எல்லாச் சனமுமே கலைஞ்சு போச்சுதுகள். என்ர கால்மாட்டில அம்மாவும், தங்கச்சியும் மட்டும் அழுது கொண்டே இருந்ததுகள். எனக்கு ஒரே துக்கமாக இருந்தது.

நான் இந்த குழிக்கு வந்த பிறகு எனக்குப் பின்னால வந்து நிறைய இயக்கப் பொடியளும், சாதாரண சனங்களுமா என்னச் சுத்திவர இடம் பிடிச்சுக் கொண்டுதுகள். கிட்டத்தட்ட மூணு வருசமா இந்தக் குழியில கிடக்கிறன். இதுவரையில ஒரு நாயள் கூட என்னப் புதைச்ச இடத்துக்கு வந்ததேயில்லை. அம்மாவும் தங்கச்சியும் இடைக்கிட வந்து என்ர சமாதியில புல்லுப் புடுங்கிப் போட்டு அழுதிற்றுப் போகுங்கள். வேற ஒருத்தருமே வந்ததில்ல. நேற்று மத்தியானம் நட்ட நடு வெய்யில ஓராள் வந்தது. ஒத்த காலோட ஒரு துவக்க கக்கத்துக்க வச்சபடி பொல்லுமாதிரி ஊண்டிக் கொண்டு, இடுப்பில பெல்ட்டில கிறனைட் தொங்கிக் கொண்டிருக்க, கறள் பிடிச்ச இரும்புத் தொப்பி முதுகில தொங்கிக் கொண்டிருக்க, பெரிய முளியும் உருவளிஞ்ச முகமுமா, ஏதோ ஒரு புதுவிதமான

துவக்கு ஒண்ட நீட்டடின படியே என்ர சமாதிக்கு வந்து என்ன எழுப்பிச்சுது. அதின்ர கையப் பாத்தன் தசை ஒண்டும் இல்லாமல் வெறும் எலும்புக் கூடாகத் தெரிஞ்சுது. " டேய். . எழும்படா. டேய். . . எழும்படா. . . ஒய்வெடுத்தது காணும் எழும்படா: எழும்பி இதப்பிடி. போ. . . போய்ச்சுடு கண்ணில அம்பிடுகிறவன் எல்லாரையும் சுட்டுத் தள்ளு. எழும்பு. . " குரலக் கேட்ட பிறகுதான் விளங்கிச்சுது ஆரண்டு. எங்கட முகாமுக்குப் பொறுப்பாயிருந்த, பிராந்தியப் பொறுப்பாளர். எத்தினதரம் இந்தக் காலால அடிச்சிருப்பான். இப்ப ஒத்தக் காலோட வந்து நிக்கிறான்.

" அதுசரி நான் செத்துப் போன பிறகும் எழும்பிப் போய்ச் சுடச் சொல்லிக் கூப்பிடுறானே இவன் . . " எண்டு எனக்குள்ள யோசிச்சன். அவன் திரும்பத் திரும்ப வெருட்டி எழுப்பினானென்ன.

எழும்பிப் போய் கண்ணில அம்பிடுகிற எல்லா மனிசரையும் சுட்டுத் தள்ளட்டாம். இல்லையெண்டால் எனக்கு மரண தண்டனையாம். விசரிப்பயல். நான் செத்துப் போன பிறகு எனக்கு திரும்ப என்னண்டு மரணதண்டனை தருவான் ?

எனக்கு ஒண்டு மட்டும் விளங்கிச்சுது. இப்ப எங்கட மண்ணில சனங்களச் சுட்டுத் தின்னுற பெரும் பிசாசுகளின்ர ஆட்சிதான் நடக்குதெண்டு மட்டும் விளங்கிச்சுது. பெரும் பிசாசுகள எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாத எங்கட சனங்கள் தான் பாவம்.

செத்துப் போனவனையும் , தங்களாலயே சாகடிக்கப் பட்டவங்களையும் வச்சு விளம்பரஞ் செய்து லாபந்தேடின இந்தப் பிசாசுகள் இப்ப செத்துப் போனவனையும் எழுப்பித் தன்ர கையில இருக்கிற மூளையில்லாத் துவக்கத் திணிச்சு மனிதத்த புசிக்கட்டாமெண்டு கட்டளையிடுகிற பெரும் பிசாசுகளாக உருமாறிப் போச்சுதுகள். " டேய் . . . எழும்படா. .. வைப்பன் இப்ப மண்டையில. . . ." பெரும் பிசாசு திரும்பவும் அதட்டிச்சுது. எனக்கு எல்லாத்தையும் நினைக்க நினைக்க ஆத்திரம் வந்தது. இந்தப் பிசாச இண்டைக்கு ஒரு பாக்கிறன் பார் எண்டு நினைச்சுக் கொண்டு என்ர குழிய விட்டு எழும்பினன். . .


" என்ராப்பா நைற் வேலயே

செய்திற்று வந்தனி ? இவ்வளவு நேரம் நிண்டு எழுப்பிக் கொண்டிருக்கிறன். . இண்டைக்கு எனக்கு உடம்பு சரியில்லயடாப்பா . . என்ர வேலயப் போயச் செய்யன் ? " எண்டபடி அருள் என்ர படுக்கையில வந்து குந்தினான். நான் கண்ட கனவ அவனிட்ட சொல்லாமெண்டு நினைச்சன். ஆனால் அவன் என்னப் பயித்தியம் எண்டு சொல்லுவான். இப்பிடி அவனட்ட நான் காணுற கனவுகளச் சொல்லி நிறையத் தரம் வாங்கிக் கட்டியிருக்கிறன். " நீ நினைச்சுக் கொண்டு படுக்கிறதாலதான் இப்படிக் கனவுகள் வருகுது " எண்டு சொல்லுவான். நான் நினைச்சுக் கொண்டு படுக்கிறதால இப்படிக் கனவுகள் வருகுதா, அல்லாட்டித் தீர்க்க தரிசனமா வருகுதா எண்டதப் பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது.

ஆனால் பிசாசுகளுக்கும் எங்கட மண்ணுக்கும் ஏதோ விட்ட குற தொட்ட குற இருக்குதெண்டது மட்டும் எனக்கு விளங்குது.

*கனவான்*

# தேடல்



நீயும் மார்க்ஸ் நானும் மார்க்ஸ்
நீயும் லெனின் நானும் லெனின்
நீயும் அகதி நானும் அகதி

உனக்கும் வேலையில்லை
எனக்கும் வேலையில்லை

உனக்கொரு ஜென்னியும்
எனக்கொரு குறுாப்ஸ் காயாவும்
இங்கு வராமல் போவது ஏனோ ?

-சுகன்-

எமக்குக் கிடைத்த
துண்டுப் பிரசுரம்

# மரணித்தும் எழுவோம்

எம் பாச பூமியை விட்டுப் பிரிந்த நாம் எம் தேசத்தை இட்டு இன்னும் மௌனமாகவே உள்ளோம்.

இந்த மௌனத்தைக் கலைத்து எம்மை இக் கதிக்கு ஆளாக்கிய வரலாற்றுத் தலைமைகளை நாம் என்ன செய்யப் போகிறோம் ?

எமது தேசத்தின் கறைபடிந்த அத்தியாயம் ஆங்கிலேயர் நாட்டை விட்டு வெளியேறிய பத்து மாதங்களின் பின் எம் சகோதரர்கள் ஆண்ட பரம்பரையின் ஒப்புதலுடன் ( ஜீ ஜீ ) மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள்.

கல்லோயா அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் எமது பாரம்பரிய பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1956 இல் தனிச் சிங்களச் சட்டம் இயற்றப்பட்டு நாம் இரண்டாம் தர பிரசைகளாக்கப்பட்டோம்.

1957 இல் செல்வா பண்டா ஒப்பந்தம். இது கண்டி யாத்திரை புகழ் ஜெயவர்த்தனாவால் முறியடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1958 இல் உயிரழிப்பின் மூலம் தமது எண்ணத்தைச் செயற்படுத்தத் தொடங்கினர்.

இவ் வரலாற்றுப் பின்னணியில் உருவாகிய தமிழ் தேசியத்துக்கு தலைமை தாங்கினார் தந்தை செல்வா. ஒடுக்குமுறைகளுக்கு எதிராக தமது நலனுக்கு ஏற்ற வகையில் குரல் கொடுக்கத் தொடங்கினர். இவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் வன்முறையால் அடக்கப்பட்டது.

1964 இல் சிறிமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் மீண்டும் மலையக மக்களை இன்னலுக்குள்ளாக்கினர். இதற்கு ஒத்துழைக்காமல் மேலவை உறுப்பினாரக இருந்த திரு எம். மாணிக்கம் செனற்சபையிலிருந்து வெளியேறினார்.

1972 இல் சிறிமா அரசின் தரப்படுத்துதல், அப்போ கிளம்பிய தமிழ் இளைஞர்களின் எழுச்சி.

1974 இல் இடம் பெற்ற தமிழாராட்சி மாநாட்டின் போது அரசினால் நடாத்தப்பட்ட ஒன்பது உயிர்ப் பலிகளைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தின் முன்னோடியும், தனது மனவுறுதியை மற்றவர்களுக்கு விட்டுச் சென்ற உரும்பிராய் சிவகுமாரன் தற்கொலை.

இப்படியே இன்பம், செல்வத்தின் கொலையுடன் இனப் படுகொலையாக 77 இல் நாடு தழுவிய ரீதியாகவும்,

1981 இல் உள்ளூர் தேர்தல் நேரத்தின் போது தென்னாசியாவின் சிறந்த கலைப்பொக்கிசமான யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது.

இவற்றைத் தொடர்ந்து தமிழரின் புதிய ஆண்டாக வர்ணிக்கப்படும் 23 ஆடி 83 இன வெறியின் கோரத் தாண்டவம் கோடிக்கணக்கான சொத்துக்கள் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதோடு பல லட்சம் மக்களையும் அகதியாக்கியது. இந்திய அரசின் தூதர்களாக நரசிம்மராவும், பார்த்தசாரதியும் வந்து போனார்கள். இப்படி இலங்கை அரசு இனப் பிரச்சனையை தீர்ப்பதற்கு முயற்சி எடுப்பதாக நாடகமாடியது. வட்டமேசை மாநாடு என்றும் திம்புப் பேச்சுவார்த்தை என்றும் பெங்களூர் மாநாடு என்றும் தொடர்ந்து கொண்டிருந்த வேளையில் இலங்கை அரசு வடமராட்சிப் பகுதியில் தாக்குதலை மேற் கொண்டது. இதையே தருணம் என்று கணித்த ராஜீவ் காந்தி 'கருணையுடன்' தனது படையை அனுப்பி வைத்தான். இதனைத் தொடர்ந்தும் ஒப்பந்தம், யுத்த நிறுத்தம், மோதல், வெளியேற்றம், இலங்கை அரசு இயக்கங்களுடன் தேன் நிலவு நிகழ்வுகளாகி பின்பும் பேச்சுவார்த்தை தெரிவுக்குழு, தொண்டமான் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேற்றம் இப்போ பாரிஸில் பேச்சுவாரத்தை. . . .

இந்த நாடகங்கள் ஏன் என்பது பற்றி ஆராய்ந்தால் எல்லாம் ஆளும் கட்சிகள் தமது இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு மேற்கொள்ளும் முயற்சிகளே. இந் நிலைமைகளை அம்பலப்படுத்த வேண்டிய வரலாற்றுக் கடமை எம் மீது சுமத்தப்பட்டுள்ளது. எமது பொது எதிரியான இலங்கை அரசை சர்வதேச ரீதியில் அம்பலப் படுத்துவதுடன் மலையக, முஸ்லீம், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கப் போராடுவோம்.

**சுயாதீன தகவல் மையம்**

**நோர்வே.**


நன்றி: →

# களத்தில்

?

விடுதலைப் புலிகள் சாதாரண முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல

?



# மீண்டுமொரு முஸ்லிம் இனப்படுகொலை

## கறை படிந்த கரங்கள்

செப்டம்பர் 15, 92 இன் இருள் முற்றும் பிரியாத அதிகாலைப் பொழுதில் பொலநறுவையின் நான்கு முஸ்லிம் கிராமங்கள் மீது நடாத்தப்பட்ட கோரத்தாண்டவத்தில் நூற்று அறுபதுக்கும் மேலான முஸ்லிம்கள் களப்பலியாகினர்.

இந்தக் களப்பலிக்கு பச்சிளம் குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்தோர் என்ற எந்த பேதங்களுமின்றி இரையானார்கள்.

தமிழர் வீரம் 'கங்கை கொண்டு கடாரம் வென்றதோ' என்னவோ இந்த அப்பாவித்தனமான முஸ்லிம்களைக் கொன்று வீரம் பரப்பியது

மானம், மனிதாபிமானம் உள்ள தமிழர் தம் தலை கவிழ்ந்தது

படிந்தது அவமானம்.

வழமை போல புலிகள் இப்படுகொலையை மறுத்திருந்தாலும், கடந்து போன வரலாறு இந்த மறுப்புக்கு எதுவித அர்த்தப்பாட்டையும் கொடுப்பதாகவோ, யாரும் இதை நம்பத் தயாராகவோ இல்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதும், காத்தான்குடி, ஏறாவூர், அழிஞ்சிப்பொத்தான படுகொலைகளும், இதுவும் புலிகளின் அரசியலில்-புலிகளின் ஈழத்தில்-முஸ்லிம்களுக்கு இடமில்லை எனத் தெரிவிப்பதாகவே உள்ளது.

முஸ்லிம்களை அரசியல் ரீதியாகவும், கருத்துரீதியாகவும் வென்றெடுக்க முடியாத, அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாத கையாலாகாத் தனத்தின் விளைவு தான இந்தப் படுகொலைகளும் விரட்டியடிப்பும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையும் அதனுடன் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ள முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமையையும், மழுங்கடிப்பதாகவும், பின்தள்ளுவதாகவுமே புலிகளின் இந்நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

வடகிழக்கிலிருந்து முஸ்லிம் மக்களை ஒழித்துவிட்டு இலகுவாக ஈழம் காணலாம் எனப் புலிகள் நினைப்பார்களானால் அதைவிட மூடத்தனம் ஒன்றிருக்க முடியாது என்பதும், அவ்வாறு காணும் ஈழம் ஈழமாக அல்ல இஸ்ரேலாகத்தான் இருக்குமென்பதையும் மீண்டும் மீண்டும் சொல்லித் தொலைக்க வேண்டியதாயுள்ளது.

தமிழ் தேசிய வாதத்தில் நோய்க்கூறாகப் பரவிவரும் முஸ்லிம் விரோதப் போக்கானது சிறுபான்மை இனங்களுக்கிடையே மோதலில் தனது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ளும் சிங்கள பேரினவாத அரசிற்கு சாதகமாக அமைந்து வருகிறது. இது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை இரத்தக் கறை படிந்த வரலாறாக்கியுள்ளது.

இந்த முஸ்லிம் விரோதப் போக்கையும், தமிழ் இனவாதத்தையும் அடியோடு எதிர்க்காதவரை / ஒழிக்காதவரை தமிழ் மக்களின் விடுதலை என்பது திரிசங்கு சொர்க்கமாகத் தானிருக்கப் போகிறது என்பது நிதர்சனமான உண்மை.

மகாவலி கங்கைகரையோரம் கறைபடிந்த கரங்களை எந்தக் கங்கையில் கழுவித் தொலைக்கப் போகிறார்கள்?

நன்றி: சரிநிகர்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு.**